# சுதந்திரன்

SUTANTIRAN

தொலைபேசி: 23411 விலை சதம் 50

வள்ளுவர் ஆண்டு 2005, வைகாசி 5உ (19-5-74) ஞாயிறு மே 19 ரபி: 26ஆகி - புத்தகம் 27 இதழ்-38


## ஈழத்தமிழர் போராட்டத்தை சீனு ஆதரிக்கிறது!

"மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக யுத்தம் நடத்துவது முற்றிலும் நியாயமேயாகும்."

—ஐ. நா. சபையில் சீனப் பிரதிநிதி திரு. வான்ட்ஜு-சுவான் பேசியது.

# 'குடியரசு விழாக்களை பகிஷ்கரிப்பீர்!'

# தமிழ் மாணவருக்கு அறைகூவல்!!

## பீலிக்ஸ் பின் வாங்கினர்!

கடந்த ஞாயிற்றுக் கிழமை கொழும்பு ஆய்வு வட்டத்தினர் பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் 'இன்றைய இலங்கை' எனும் தலைப்பில் ஓர் சர்வகட்சி கருத்தரங்கை நடத்தினர். இக்கருத்தரங்கில் அரசாங்கத்தின் சார்பில் கலந்து கொண்டு பேசுவதற்கு சம்மதம் தெரிவித்திருந்த உள்ளூராட்சி, உள் நாட்டலுவல்கள் அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா இறுதிக் கட்டத்தில் பின்வாங்கினர். கூட்டத்துக்கு அவர் சமூகம் கொடுக்கவில்லை. இக்கூட்டத்தில் தமிழர் கூட்டணிச் செயலாளர் நாயகமும் தமிழரசுக் கட்சித்தலைவருமான நாவலர் அமிர்தலிங்கம் அவர்களும் உடுப்பிட்டி சிவாவும் கலந்து கொண்டது இங்கு குறிப்பிடத் தக்கது.

(கூட்ட விபரம் 8-ம் பக்கத்தில்)

## விடுதலைக்குப் போராடவும் உறுதி பூண அழைப்பு!

## மே 22—நாவலர் அறிக்கை!

"தமிழ்த் தேசிய இனத்தின் அடிமைத்தளை மேலும் இறுக்கப்பட்டு, தமிழ் பேசும் மக்கள் இந்நாட்டில் என்றென்றும் ஆளப்படும் இனத்தினர் என்ற நிலையை உறுதி செய்யும் குடியரசு அரசியல் சட்டம் வந்த நாளே மே 22 இந்த நாளில் தமிழ் மக்கள் கொண்டாடவோ, குதூகலிக்கவோ எதுவித நியாயமுமில்லை. எனவே குடியரசுநாளன்று அரசாங்கமும் அரசாங்க ஆதரவாளர்களும் ஏற்பாடு செய்யும் கொண்டாட்டங்களை தமிழ் மக்கள் பூரணமாக பகிஷ்கரிப்பதுடன், தங்கள் விடுதலைக்கும் உரிமைகளுக்கும் தொடர்ந்து போராடுவதற்கு உறுதியெடுத்துக் கொள்ள வேண்டும்."

— இவ்வாறு தமிழர் கூட்டணிச் செயலாளர் நாயகமும், தமிழரசுக்கட்சித் தலைவருமான திரு: அ: அமிர்தலிங்கம் தமிழ் பேசும் மக்களுக்கு சுதந்திரன் மூலம் விடுத்துள்ள வேண்டுகோள் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

குடியரசு தினத்தையொட்டி பாடசாலைகளில் நடைபெறும்

(4-ம் பக்கம் பார்க்க)

## ஆண்ட பரம்பரை!

பாண்டிய மன்னவன் சோழன் பனிவரை
பாய்ந்து கலக்கிய சேரமகன்
ஈண்டு பிறந்த குலத்தில் எழுந்தனை...
ஏடா தமிழா! எடடா படை!
கூண்டுக் கிளிநிலை எத்தனை நாள் வரை?
கூப்பிடு கூப்பிடு வீரர்களை!
ஆண்ட பரம்பரை மீண்டும் ஒருமுறை
ஆள நினைப்பதில் என்ன குறை?

கோட்டுப் புலிக்குலம் வாழக் குகையுண்டு!
குருவிக்குக் கூடு மரத்திலுண்டு!
காட்டு வயற்புற நண்டுக்குப் பொந்துண்டு!
அஞ்சல் எலிக்கோர் குழியுமுண்டு!
கோட்டை அமைத்துக் கொடியொடு வாழ்ந்தவர்
குலத்துக் கொரு புகல் இங்கிலையோ?
நாட்டை அமைப்பாய் தமிழ் மகனே! திசை
நடுங்கப் புயல்போல் நடைகொளடா!

மானம் அழைத்தது! வீரம் அழைத்தது!
மலைத்தோள் இரண்டும் எழவிலையோ?
ஊனத் தசைதான் தமிழுடலோ? அட
உணர்ச்சி கடவுள் தரவில்லையோ?
ஏனம் சுமந்து பிழைப்பதற்கோ? பிறன்
எச்சில் பொறுக்கவோ தமிழரினம்?
ஈனச் சரிதை கிழியப் புதியதோர்
ஏடு படைப்போம்... எழு தமிழா!

காசி ஆனந்தன்

## சிங்களம் வாழ்கிறது! தமிழ் ஈழம் தாழ்கிறது!

சர்வ சிங்கள மய அரசாங்கம் புதிய மாவட்டத்திட்டம் என்ற போர்வையில் தமிழ்ப்பகுதிகளைப் புறக்கணிக்கின்றதென்பதை யாரேனும் மறுக்க முடியுமா?

மாவட்டத் திட்டத்தின் கீழ் சில சிங்கள மாவட்டங்களுக்கும் தமிழ் மாவட்டங்களுக்கும் ஒதுக்கப்பட்ட பணத் தொகை இதனை நிறுவுகின்றது!

| | | |
|---|---|---|
| கண்டி மாவட்டத்துக்கு | 140,23,477 | ரூபா. |
| காலி ,, | 76,89,687 | ,, |
| குருநாகல் ,, | 119,43,574 | ,, |
| அனுராசபுரம் ,, | 138,70,603 | ,, |
| வதுளை ,, | 145,68,326 | ,, |
| மொனருகலை ,, | 120,68,326 | ,, |

இவற்றுடன் பின்வரும் தொகைகளை ஒப்பிடுக :-

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாண மாவட்டத்துக்கு | 66,22,374 | ரூபா. |
| மட்டக்களப்பு ,, | 60,13,677 | ,, |
| மன்னார் ,, | 55,20,097 | ,, |
| வவுனியா ,, | 55,89,809 | ,, |
| திருக்கோணமலை ,, | 66,88,715 | ,, |

இந்தப்பண ஒதுக்கீடு குறித்துக் காவலூர் பா. உ., பிரதம அமைச்சர் திருமதி, ஸ்ரீமா பண்டாரநாயக்காவுக்கு எழுதிய கடிதத்தை ஈண்டுத் தருகின்றோம்,

"22-11-73 இல் யாழ்ப்பாணக் கச்சேரியில் நடைபெற்ற மாவட்டத்திட்டக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட யாழ்ப்பாண மாவட்டத்தின் புதியவேலைத் திட்டத்தின் வேலைச் செலவு மதிப்பீடு 120 லட்சம் ரூபாவாகும். உங்கள் அமைச்சு புதிய வேலைகளுக்கு 10 லட்சம் ரூபா. மட்டுமே இப்பொழுது கொடுத்துள்ளது. இந்தப் 10 லட்சம் ரூபாவில் குடியேற்றத் திட்டங்களையும பெரிய நீர்ப்பாசன வேலைகளையும் கொண்ட கிளிநொச்சித் தொகுதிக்கு 8 லட்சம் வரையில் ஒதுக்க வேண்டியுள்ளது, மிகுதிப் 10 தொகுதிகளுக்கும் 2 லட்சம் ரூபாவே மிஞ்சுகிறது. இதனைப் பிரித்தால் ஒரு தொகுதிக்கு இருபதினாயிரம் ரூபாவே தேறுகிறது. இத்தொகை முன்னர் ஒவ்வொரு தொகுதியிலுமுள்ள கிராமச்சபைகளுக்கு அரசாங்கம் கொடுத்த நன்கொடையிலும் குறைவானதென்பதை

(4-ம் பக்கம் பார்க்க)

## தமிழ் இளைஞர்கள் அனுராதபுரம் சிறைச்சாலைக்கு இடமாற்றம்!

நீர்கொழும்பு சிறைச்சாலையில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த திரு. சேனாதிராசாவும் ஏனைய தமிழ் இளைஞர்களும் இப்போது அனுராதபுரம் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

### மாநில சுயாட்சிப் போராட்டத்தில்

## சிறை செல்லத் தயாராகுமாறு தி. மு. க. தொண்டர்களுக்கு கருணாநிதி அழைப்பு!

மாநில சுயாட்சிப் போராட்டத்தில் சிறை செல்ல நேர்ந்தாலும் அதற்குத் தயாராக இருக்குமாறு தி.மு கழகத்தவர்களுக்கு தமிழ் நாடு முதல்வரும் கழகத்தலைவருமாகிய கலைஞர் டாக்டர் மு கருணாநிதி அறைகூவல் விடுத்துள்ளார்.

அண்மையில் மாநில சுயாட்சித் தீர்மானம் தமிழ் நாடு சட்ட சபையில் நிறைவேற்றப்பட்டது தெரிந்ததே. அதன் பின்னர் தஞ்சையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றிலேயே தமிழக முதல்வர் மேற்கண்ட அறைகூவலை விடுத்துள்ளனர்.

அவர் மேலும் அங்கு பேசுகையில் கூறியதாவது:-

'நாங்கள் மாநில சுயாட்சி கேட்கிறோம் என்பதற்காக நாளைக்கே தி.மு.கழகத்தைப் பார்த்து நீ மாநில சுயாட்சி கேட்கிறாய்; ஆகவே உன் அரசாங்கத்தை (கலைக்கிறேன் என்று டெல்லியிலிருந்து உத்தரவு வருமானால் அதைவிட என்னுடைய பொது வாழ்க்கையிலே புனிதமான சரித்திரச் சம்பவம் வேறு எதுவுமே இருக்கமுடியாது.

'போராட்டம் எங்களுக்குப் புதியதல்ல; பழக்கப்பட்ட ஒன்று. சிறைச்சாலை நாங்கள் போய்ப், போய் வந்து, போகிறேன் என்று சொல்லாமல் 'போய் வருகிறேன்' என்று சொல்லி விட்ட வந்த பழைய வீடு தான்!'

மாநில சுயாட்சியை நாம் கோருவது மத்திய அரசின் சுமைகளைக் குறைக்கத்தான். மாநிலங்களின் உரிமைகளை நிலை நாட்டுவதற்காகவே, நாம் மாநில சுயாட்சியை கேட்கின்றோம்.

ஒருவேளை ஆளும் கட்சியாகவே இருந்து இந்த லட்சியத்தை நிறைவேற்ற முடியாது என்ற நிலை பிறக்குமானல், அப்போது, நான் எம் எல். ஏ. ஆகவேண்டும், எம். எல். சி. ஆக வேண்டும்; ராஜ்ய சபைக்குப் போக வேண்டும்' என்றெல்லாம் இன்று கேட்பவர்கள் — அன்று 'நான் இந்த லட்சியத்துக்காகச் சிறைக்குப் போகிறேன்' என்று கேட்பதையேதான் நான் வரவேற்பேன்.

இந்த லட்சியத்திற்காகச் சிறை செல்வதற்கு நான் முந்தி நீ முந்தி என்று வர வேண்டும்.

சிறைச்சாலைக்கும் சிம்மாசனத்துக்கும் வித்தியாசம் பாராட்டாதவர் யாரோ, அவர்தான் உண்மையான நாட்டுப் பற்றுள்ளவர்; அவர்தான் அண்ணாவின் உண்மையான தம்பி.

இந்த லட்சியத்துக்காக சிறை செல்ல வேண்டும்— போராடவேண்டுமே ஏன் இந்த வம்பெல்லாம் என்று நினைப்பவர்கள்—வேறு வேலை பார்ப்போம் என்று கருதுவோர் ஒதுங்கிக்கொள்ளுங்கள்!

(4-ம் பக்கம் பார்க்க)

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

# அரசியல் மடல்

# உறுதி கொள்வோம்!

அன்பு நண்பா,

ஈழத் தமிழினத்தை இழி நிலைக்கு தள்ளி-ஆண்ட பரம்பரையை அடிமை இனமாக்கி, என்றென்றும் ஆளப்படும் இனமாக்கி - எங்கள் வாழ்வும் எங்கள் வளமுமான மங்காத் தமிழ் மொழியைப் பங்கப்படுத்தி - தமிழர்களைத் தாழ்த்தி விட்ட புதிய குடியரசு அரசியலமைப்புச் சட்டம் வந்து எதிர்வரும் மே இருபத்திரண்டுடன் இரண்டாண்டு நிறைவு பெறுகிறது!

ஆம் நண்பா, தமிழ்க் குடி கெடுக்கும் குடியரசு அரசியல் சட்டம் வந்து மே இருபத்திரண்டுடன் 730 நாட்கள் முடிவடைகின்றன என்றால்-அச்சட்டத்துக்கு விசுவாசமாக நடக்கமாட்டோம்—அச்சட்டத்தை நிராகரித்திடுவோம் — தூக்கிவீசுவோம்- என்கிற தமிழ் சமுதாயத்தின் உறுதிமிக்க ஒருமித்த குரலை எதிரொலித்து. அரசாங்கப்பதவியை தூக்கி யெறிந்த உணர்ச்சிக்கவிஞர் காசி ஆனந்தன் சிறைப்பிடிக்கப்பட்டு அன்றுடன் 693 நாட்கள் முடிவடைகின்றன.

மே 22-குடியரசு நாள் தான் சிங்களவர்களுக்கு-அதனால் அன்று அவர்கள் விழா எடுப்பதில் தவறில்லை; ஆனால் தமிழர்களைப் பொறுத்தவரை, அன்று புதியதோர் முடியரசு-சிங்கள முடியரசு-வந்திட்டநாள்! ஆங்கில முடியரசுக்கு அடிமையாகிக் கிடந்த தமிழர்கள், முதன்முதலாக சிங்கள முடியரசுக்கு அடிமைப்பட்ட நாள்! ஈழத்தமிழ்த் தேசிய இனத்தைப் பொறுத்தவரை மே 22ல் நடைபெற்றது - எஜமான மாற்றம் - ஆதிக்க வர்க்கத்தினரின் மாற்றமே தவிர - அதாவது ஆங்கில ஏகாதிபத்தியத்தின் எச்சசொச்சங்களும் அழிக்கப்பட்டு அந்த இடத்தில் சர்வ சிங்கள ஏகாதிபத்தியம் உட்கார்ந்துகொண்ட வைபவமே தவிர - வேறெதுவுமில்லை!

ஆங்கில ஏகாதிபத்தியம் தனக்கு அடிமை குடிமை சேவை செய்ய அன்று பலரை விலைக்கு வாங்கியதுபோல — புதிய சிங்கள ஏகாதிபத்தியமும் அடிமை குடிமை வேலைபார்த்திட தமிழ் மக்களிடையே ஒரு புதிய குழுவை உருவாக்கியிருக்கிறது. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர்கள் என்ற லேபலுடன் பவனிவரும் இந்தச் சிங்கள ஏகாதிபத்தியப்பாதந்தாங்கி அடிமைகளின் தலைவர் தான் குமாரசூரியர்!

குமாரசூரியரையும் அவரது சீடகோடிகளான வடபகுதி சிறீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர்கள் என்ற பெயரில் உலாவும் சில சில்லறைகளையும் கங்காணிகளாக—ஏஜண்டுகளாக—பயன்படுத்தியே தமிழர்களை என்றென்றும் அடக்கியாண்டு விடலாம் என்று மனக்கோட்டை கட்டி வருகிறது சிங்கள ஏகாதிபத்தியம்!

இதே போல — மற்றோர் சிங்களக்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சியும் இதே தந்திரத்தைப் பின்பற்றி—அடுத்த பொதுத் தேர்தல் ஒன்று நடந்தால், அதில் நாமேதான் ஆட்சியைக் கைப்பற்றுவோம்—அப்போது தமிழர்களை அடக்கியாள வசதியாக இருக்கும் என்கிற ஓர் நப்பாசையுடன் — தமிழ் ஈழத்தில் தனக்கு 'ஆமாம் சாமி' போடக் கூடியவர்களைப் பொறுக்கியெடுத்து அமைப்பாளர்கள் ஆக நியமித்திடுவதில் இப்போதே ஈடுபடத் தொடங்கியிருக்கிறது

ஆற்றினில் வெள்ளம் - கரையினில் நெருப்பு-இந்த இரண்டுக்கும் நடுவேதான் கண்ணீர்விட்டு வளர்த்த நம் விடுதலை இயக்கத்தைக் கட்டிக்காத்திட வேண்டிய ஒரு நெருக்கடியான சூழ் நிலையில் நாம் இன்றைக்கு இருக்கிறோம்!

ஆம் நண்பா, தமிழ் சமுதாயத்தின் மீது முடியாட்சி செலுத்தவிரும்பும் ஏகாதிபத்திய வெறி பிடித்த இரண்டு சிங்களக்கட்சிகளும் தங்கள் கையாட்களின் மூலம், தமிழ் ஈழத்தில் ஒரு 'காலனி' ஆட்சியை உருவாக்கிவிடலாமெனக் கனவு கண்டு வருகின்றன.

இந்த நோக்கத்துடன் தான் ஆட்சியாளர்கள் தமிழ் மக்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளை ஒதுக்கிவிட்டு—மக்களால் நிராகரிக்கப்பட்ட தமது கையாட்களை தங்கள் கட்சி அமைப்பாளர்களாக நியமித்து—அவர்களின் மூலம் தங்கள் இஷ்டப்படி தமிழ் ஈழத்தை ஆள முயற்சிக்கிறது. இந்தப் புதிய 'காலனி' ஆட்சி முறையை தமிழ் சமுதாயம் [illegible] எதிர்த்துப் போராடி தமிழ் ஈழத்தின் விடுதலையை வென்றெடுத்தே தீருவது என்கிற உறுதிமொழியை மே 22ல் தமிழினம் எடுத்துக்கொள்ள வேண்டும்!

புதிய அரசியல் சட்டத்தை எதிர்க்கின்ற நம்மைப் பார்த்து —

முதலாளித்துவ வாதிகள்,<br>
பிற்போக்கு வாதிகள்,<br>
வகுப்புவாதிகள்,<br>
இன வெறியர்கள்,

என்றெல்லாம் ஏளனத்துடன் வாயில் வந்தபடி திட்டிவருகின்றனர்; வானொலியில் ஏசல் கணைகளை வீசிவருகின்றனர்; தங்கள் ஊதுகுழல்களான ஏடுகளில் எழுதிவருகின்றனர் ஆளவந்தாரும் அவர்தம் அடிவருடிகளும்!

தமிழ் சமுதாயத்தின் விடுதலைக்கும் உரிமைக்கும் போராடுகின்ற ஒரே காரணத்துக்காக—நம்மீது வீசப்படும் பழிச் சொற்களையும் இகழ்ச்சிக்கணைகளையும் நாம் இன்முகத்துடன் ஏற்றுக்கொள்ளுகிறோம்! வகுப்புவாதிகள், இன வெறியர்கள், என்று எது வேண்டுமானாலும் கூறட்டும்—மகிழ்ச்சியுடன் தாங்கிக்கொள்ளவோம்! ஆனால் எது இனவெறி — எது வகுப்புவாதம் என்பதை நடுநிலையாளர்கள் சிந்தித்துப்பார்த்திட வேண்டும்!

சிங்களம், தமிழ் — இரண்டு மொழிகள் பேசப்படும் இந்நாட்டில் — இரண்டு தனித் தனித்தேசிய இனங்கள் வாழும் இந்நாட்டில்—சிங்களத்தை மட்டும் அரசாங்க மொழியாக்கி, அதை அரசியல் சட்டத்திலும் — மூன்றில் இரண்டு பெரும்பான்மையின்றி இனித்திருத்தவே முடியாத வாறு — பொறித்தது பிற்போக்கு இனவெறியா?

அல்லது;

சிங்கள மொழிக்குத் தரப்பட்டுள்ளது போன்ற அதே இடத்தை அரசியல் சட்டத்தில் தமிழுக்கும் தாருங்கள் என்று நாம் கேட்பது இனவெறியா?

இந்நாட்டுத் தமிழ்பேசும் மக்களின் குடியுரிமைக்கு பூரண உத்தரவாதம் அளிக்காததும்—இந்நாட்டுக்காக தலைமுறை தலைமுறையாக உழைத்து ஓடாகிப்போன 10 இலட்சம் மலையகத்தமிழர்களின் குடியுரிமையைப் பறிப்பதற்கு காரணமாக இருந்ததுமான—கொடிய குடியுரிமைச் சட்டங்களை அரசியல் சட்டத்தில் இடம் பெற வைத்தது பிற்போக்கான செயலா?

அல்லது;

இலங்கையைத் தாயகமாகக் கொண்டவர்கள் அனைவருக்கும் பூரண பிரஜாவுரிமை அளிக்கப் படவேண்டுமென்றும் பிரஜைகளுக்கிடையே பாரபட்சம் காட்டப்படக் கூடாதென்றும் நாம் கூறுவது பிற்போக்குவாதமா?

சோசலிசம் பேசிக்கொண்டு, பௌத்தத்தை அரசாங்க மதமாக்கி ஏனைய சிறுபான்மை மதங்களுக்கு இல்லாத உரிமைகளை பௌத்த மதத்துக்கு மட்டும் அள்ளி வழங்கியது இனவெறியா?

அல்லது!

இலங்கை அரசு மதச் சார்பற்றதாகவும், எல்லா மதங்களுக்கும் சமவாய்ப்பு அளிப்பதாகவும் இருக்கவேண்டும் என்று நாம் கேட்பது வகுப்புவாதமா?

அரசியல் சட்டத்தில், சில அடிப்படை உரிமைகளை கொடுப்பதுபோல் கொடுத்து பறிப்பதுபோல் பறித்திருப்பதும், கொடுக்கப் பட்டுள்ள அடிப்படை உரிமைகளைக்கூட நீதிமன்றம் சென்று நிலைநாட்ட முடியாதவாறு தடுத்திருப்பதும பிற்போக்குச்செயலா?

அல்லது—

ஐ. நா. மனித உரிமைச் சாசனத்தில் கூறப்பட்ட உரிமைகள் அனைத்தும் அப்படியே அரசியல் சட்டத்தில் இடம் பெறவேண்டுமென்றும், இந்த அடிப்படை உரிமைகளை நீதிமன்றம சென்று நிலைநாட்டும் உரிமை குடிமக்களுக்கு அளிக்கப்படவேண்டுமென்றும் கோருவது பிற்போக்குச்செயலா?

ஒற்றையாட்சியின் கீழ் அதிகாரம் அனைத்தையும் ஒரே இடத்தில் குவித்துவைத்திருப்பதன்மூலம், அந்தந்த பிரதேச மக்களின் அபிலாஷைகளுக்கும் உணர்வுகளுக்கும் மதிப்பளிக்க மறுப்பது பிற்போக்கா?

அல்லது!

அதிகாரங்களைப் பரவலாக்கி, அந்தந்தப் பிரதேசங்களில் வாழும் மக்கள் தங்கள் நிர்வாகத்தை தங்கள் மொழியில் தாங்களே நிர்வகிக்கும் வகையில் சுயாட்சி வழங்குங்கள் என்று நாம் கேட்பது பிற்போக்கா?

அல்லது—

சாதிவேறுபாடுகள் அகற்றப்படவேண்டுமென்றும், இந்திய அரசியல் சட்டத்திலிடம் பெற்றுள்ளது போல சாதி ஒழிப்புச் சட்டங்கள் இலங்கை அரசியல் சட்டத்திலுமிடம்பெற வேண்டும் என்று நாம் கேட்பது பிற்போக்குவாதமா?

ஆம் நண்பா, ஈழத்தமிழர்களின் இந்த நியாயமான கோரிக்கைகள்—ஜனநாயக ரீதியான கோரிக்கைகள் — மறுக்கப்பட்டதன் காரணமாகவே இன்றைய தினம் பிரிவினைச் சிந்தனைகள் வெகுவேகமாக வளர்ந்து வருகின்றன; தமிழ் ஈழத்தை தனிநாடாக்கியாவது அதில் சுயமரியாதையுடன் சுதந்திர மக்களாக நாம் வாழுவோம்; வாழவேண்டும்; என்ற கருத்து, ஈழத்தமிழ் இளைஞர்களின் மனதில் ஆழமாகவேர் விட்டு வளர்ந்து வருகிறது!

வங்க மக்களின் ஜனநாயக ரீதியிலான அபிலாஷைகளையும் உணர்வுகளையும் இராணுவத்தையும் பொலிசையும் கொண்டு நசுக்கி விடலாம் என்று எப்படி அன்று யெஹியாகான் தப்புக் கணக்குப்போட்டானோ அதே ரீதியில் தான இன்றைய சிங்கள அரசும் தமிழ் மக்களின் உணர்ச்சிகளை யொட்டி தப்புக்கணக்குப் போடுகிறது!

ஈழத்தமிழர்கள் இன்னும் முஜிபர்களாக மாறவில்லை—ஆனால் யெஹியாகானாக சிங்கள அரசு மாறுமானால் — தமிழர்களும், வேறுவழியின்றி முஜிபர்களாக மாறியே தீரவேண்டிய ஒரு இக்கட்டான நிலைமையே தோன்றும்! அந்தநிலை தோன்றுவதை உண்மையிலே யாருமே விரும்பமாட்டார்கள்!

ஜனவரி 10ம் திகதி - உலகத் தமிழ் மாநாட்டின் [illegible] நாளன்று நடைபெற்ற பயங்கரக் கொடுமை [illegible] தமிழர்களைப் பொறுத்தவரை யெஹி[illegible] செயல்படுவதற்குதிட்டமிட்டு [illegible] ஆரம்ப அறிகுறியேயாகும்! இந்த நிலைமைகள், தமிழர்கள் உள்ளங்களில் ஆறாத புண்ணாகி, அவர்களை முஜிபர்களாக மாற்றுவதற்கே வழி கோலுகின்றன.

ஆம் நண்பா, புதிய அரசியல் சட்டம் வந்து இரண்டு ஆண்டுகள் சென்றும், தமிழர்களின் உணர்ச்சிக்கு மதிப்பளித்து, அவர்களது ஒரு கோரிக்கையையாவது நிறைவேற்றும் முறையில், அரசியல் சட்டத்தில் ஓர் எழுத்தைக்கூட அரசு மாற்ற — திருத்த முன்வரவில்லை! தமிழர்களை இரண்டாந்தர — மூன்றாந்தர—அடிமைகளாக—ஆளப்படும் 'காலனி' மக்களாக—தனக்கு கீழேபோட்டு நசுக்கிடவே சிங்கள அரசு மிகுந்த ஆவலுடன் செயற்பட்டு வருகிறது—

இந்த நிலையில் நண்பா, நம்மை அடிமைப் படுகுழியில் தள்ளும் புதிய அரசியல் சட்டம் வந்து இரண்டாண்டுகளாகியும் நம்முடைய விடுதலைப் போராட்டம் புதிய வேகம் பெறவில்லையென்ற ஓர் குறை உனக்கு மட்டுமல்ல—தமிழ் இளைஞர்கள பலருக்குமுண்டு என்பதை நான் அறிவேன்!

ஒரு சமுதாயத்தின் விடுதலைப் போராட்டத்தில் இரண்டு ஆண்டுகள் ஒரு பெரிய காலமல்ல—ஐரிஷ் மக்கள் தங்கள் விடுதலைக்காக 300 ஆண்டுகள் சலிப்பின்றி களைப்பின்றி தொடர்ந்து போராடி வந்திருக்கிறார்கள்! ஐரிஷ் மக்களின் அந்த திட நம்பிக்கையும் உறுதியும் சலிப்பற்ற நிலையும் நம்மக்களுக்கு வந்திடவேண்டும்!

புதிய அரசியல் சட்டத்தை எதிர்த்த காரணத்துக்காக உணர்ச்சிக்கவிஞர் காசி ஆனந்தனும், ஏனைய இளைஞர்களும் சிறைக் கோட்டத்திலுள் இன்னும் இருந்துவருகிறார்கள் என்றால் —தமிழ் சமுதாயம் அரசியல் சட்டத்தை எதிர்த்துப் போராடி வருகிறது என்பதுதான் அர்த்தம்!

ஏனெனில் சிறையில் இருக்கும் காசி ஆனந்தனும் ஏனைய உணர்ச்சிமிகு காளையரும், விடுதலை வேட்கை கொண்ட நம் தமிழ் சமுதாயத்தின் வடிவமாகவே அங்கேயிருக்கிறார்கள்! தமிழ்க்குடியழித்திட வழிவகுத்திடும புதிய அரசியல் சட்டம் பற்றி தமிழ் சமுதாயத்தின் உணர்ச்சியை வடித்துக்காட்டும் எனது நூல் ஒன்றை வெளியிட்டதற்காகவே தம்பி மகேந்திரன் கடந்த ஓராண்டாக சிறை கோட்டத்துக்குள் இருந்துவருகிறார்!!

எனவே சலிப்பும், அலுப்பும் சோர்வும் கிஞ்சிற்றும் நமக்குத்தேவையில்லை. நம்முடைய கோரிக்கைகள் நியாயமானவை; இலட்சியங்கள் புனிதமானவை; நாம் செல்லுகின்ற பாதை தூய்மையானது; இந்த உணர்வுடன் மே 22ல் மீண்டும் உறுதிகொள்வோம்— "புதிய அரசியலமைப்பை எத்தனை ஆண்டுகள் சென்றாலும் ஏற்றிடோம்; பெறுவோம் விடுதலைவாழ்வு!"

உன் அன்புத் தோழன்,

—கோவை மகேசன்

# 15. ஈழத் தமிழ் இலக்கியம் பற்றி எழுந்த சர்ச்சை!

இலங்கை, 1948ம் ஆண்டு ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திலிருந்து விடுபட்டபோதிலும், 1956ம், 1972ம் ஆண்டுகளில் ஏற்பட்ட அரசியல் திருப்பு முனைகளின் பின்னர்தான், சுதந்திரத்தினால் பெற்ற பூரண இலாபங்களையும் சலுகைகளையும் தங்களால் அனுபவித்திட முடிந்திருக்கிறது என்ற ஓர் கருத்து இந்நாட்டின் பெரும்பான்மை இனத்தினரிடையே இருந்து வருகிறது. இந்த ஆண்டுகளில் ஏற்பட்ட திருப்பு முனைகளின் பின்னரே, தங்கள் சமுதாயத்தில் மொழி உணர்வும் (சிங்கள) தேசிய உணர்ச்சியும் ஏற்பட்டதென்றும், அதன் பிரதிபலிப்பு சிங்கள இலக்கியங்களில் காத்திரமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதென்றும் சிங்கள இலக்கியகாரர்கள் கூறுவார்களானால், அது நூற்றுக்கு நூறு உண்மையே!

ஏனெனில், 1956ம் ஆண்டுதான், சிங்கள மொழியை இந்நாட்டின் தனி ஆட்சிமொழியாக்கும் சட்டம் நிறைவேற்றப்பட்டது. சிங்கள மொழிக்கு ஆட்சிமொழியென்னும் தகுதி கிடைத்ததன் காரணமாக, சிங்கள மக்களிடையே புத்துணர்ச்சியும் புத்தெழுச்சியும், சமுதாய விழிப்புணர்வும் தோன்றியதில் வியப்பு ஒன்றும் இல்லை! இது இயல்பானதே! இதன் பிரதிபலிப்பாக சிங்களத் தேசியம் விழிப்படைந்து வளர்ச்சியுற்று வருகிறது. அதன் தாக்கம் சிங்கள இலக்கியங்களில் பிரதிபலிக்கிறது.

இதே சமயத்தில், 1956ம் ஆண்டு சிங்கள மக்களிடையே தேசிய விழிப்புணர்வும், எழுச்சியும், ஏற்பட்ட நேரத்தில், இந்தியத்துவேஷ உணர்வுகளும் சிங்கள அரசியல்வாதிகளினால், அவர்கள் மத்தியில் மிகத் தீவிரமான முறையில் விதைக்கப்பட்டன. இந்திய வம்சாவளியினரான மலையகத் தமிழர்களுக்கு எதிராக ஆரம்பத்தில் தொடக்கிவிடப்பட்ட இத்துவேஷம், பின்னர் இந்நாட்டின் பூர்வீகத் தமிழர்களுக்கு எதிராக வளர்க்கப்பட்டு — இறுதியில் அது இந்திய துவேஷமாக — இன்னும் குறிப்பாகச் சொல்லப்போனால் தென்னிந்தியத் துவேஷமாக - சிங்கள மக்களிடையே இன்றைக்கும் விசுவரூபம் எடுத்து நிற்கிறது. இந்திய துவேஷம் சிங்கள மக்களிடையே வேகமடைந்தது 1956ம் ஆண்டில் தான். கடைசி இந்தியனை நாடு கடத்தும் வரை நான் கண்ணயரமாட்டேன் என்று கூறி இந்திய துவேஷத்துக்கு தூபமிட்டவர் சிங்களத் தேசிய எழுச்சியின் சின்னம் என்று கருதப்படும் காலஞ் சென்ற திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகா அவர்கள் தான்!

1956ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட சிங்களம் மட்டும் சட்டமும் சிங்களத் தேசிய எழுச்சியும், இந்நாட்டின் மற்றோர் தேசிய இனமான தமிழ் மக்களிடையேயும் முற்றிலும் மாறுபட்ட ஓர் எதிர் விளைவை — எதிர்த் தாக்கத்தை — ஏற்படுத்தியது என்பது வரலாறு குறித்து வைத்திருக்கின்ற ஓர் உண்மையாகும்.


டாக்டர் ரவீந்திரன்குமார் சேந்

ஆங்கில ஏகாதிபத்தியத்தை அகற்றுவதற்கு, சிங்கள மக்களுடன் தோளோடு தோள் நின்று போராடிய தமிழ் மக்கள், ஆங்கிலேய ஏகாதிபத்தியம் அகற்றப்பட்டவுடன், அந்த இடத்தில் சிங்கள ஏகாதிபத்தியம் வந்து குந்தும் என்று எதிர்பார்த்திருக்கவில்லை. ஆனால், 1956ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சிங்களம் மட்டும் சட்டமும் அதைத்தொடர்ந்து நடந்த நிகழ்ச்சிகளும், தமிழ் மக்களைப் புதிய வழியில் சிந்திக்க வைத்தன; தமிழ்த்தேசிய இனம், தன்னுடைய தனித்துவத்தையும், மொழியையும், பாரம்பரிய பிரதேசங்களையும் சிங்கள ஏகாதிபத்தியத்திடமிருந்து மீட்கும் விடுதலைப் போராட்டத்தை 1956ம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் திருக்கோணமலையில் கூடிப் பிரகடனப் படுத்தியது.

தமிழ்த்தேசிய இனத்தின் இந்த விடுதலைப்போராட்டம், 1956ம் ஆண்டிலிருந்து 1972ம் ஆண்டுவரை பல்வேறு வடிவங்களில், பல்வேறு முறைகளில் — நடைபெற்று வந்து, 1972ம் ஆண்டுக்குப்பின் — அதாவது தமிழ் இனத்தை பூரண அடிமை நிலைக்குத் தள்ளும் புதியசர்வ சிங்கள அரசியலமைப்பு ஏற்பட்ட பின்னர் — 'தனி நாட்டுச்' சிந்தனையாக இன்று வளர்ச்சியடைந்திருக்கிறது.




இந்த இடத்தில் ஒன்றைக் குறிப்பிடவேண்டும். இந்நாட்டைப் பொறுத்தவரை 'இலங்கைத்தேசியம்' என்று பொதுவான தேசியம் எதுவும் என்றும் இருந்ததுமில்லை — இருக்கவும் முடியாது. இரண்டு தனித்தனித் தேசியங்களை — ஒன்றுடன் ஒன்று முரண்பட்ட தேசியங்களைக்கொண்ட இரண்டு நாடுகள் — ஈழத்தமிழ் நாடும், ஈழச் சிங்கள நாடும் — சேர்ந்ததுதான் இலங்கை! 1833ம் ஆண்டு தனது நிர்வாக வசதிக்காக ஒரே நாடாக அந்நியனால் பலவந்தமாக இணைக்கப்பட்ட நாடு தான் இலங்கை! எனவே தான் 'இலங்கைத்தேசியம்' என்று சிலர் கூறித்திரிவது வெறும் கானல் நீர்தான்!

மொழி, கலை கலாசாரம், மதம் வழக்க வழக்கம், போன்ற எதிலுமே இரு தேசிய இனங்களுக்கும் ஒற்றுமையோ ஒருமைப்பாடோ இல்லாத போது 'இலங்கைத்தேசியம்' என்ற ஓர் புதிய செயற்கைத்தேசியம் எப்படி உருவாக முடியும்?

இந் நிலையில், 1956ம் ஆண்டு சிங்களம் மட்டும் சட்டத்தின் எதிரொலியாக — தமிழ் தேசிய இனத்திடையே ஏற்பட்டு வளர்ந்துவரும் எதிர் விளைவை மூடிமறைத்து விட்டு — சிங்கள தேசிய விழிப்புணர்வுக்கும் தமிழ்த் தேசிய எழுச்சிக்கும் முடிச்சுப்போட்டு, இரண்டுக்குமிடையே போலித்தனமான ஒருமைப்பாடு காணும் ஒரு விதப் போலித்தனமான சிந்தனையுடன் தமிழ் மக்களிடையேயுள்ள ஒரு குறிப்பிட்ட குழுவினர் குருட்டுத்தனமான கருத்துக்களைத் தெரிவித்து வருகிறார்கள்.

தமிழ் மக்களிடையே 1956ம் ஆண்டு முதல் ஏற்பட்டு வளர்ந்துவரும் தேசிய இன விடுதலை உணர்ச்சியை திசை திருப்பிக் காட்டுவதற்கும், மூடிமறைப்பதற்கும் இவர்கள் படாதபாடு பட்டு வருகிறார்கள். இதற்காக, சிங்கள மக்களிடையே சிங்கள அரசியல் வாதிகளால் விதைக்கப்பட்ட தென்னிந்தியவிரோத உணர்வை ஈழத் தமிழ் மக்களிடையேயும் புகுத்துவதற்கு இவர்கள் முயன்று வருகின்றனர்; தென்னிந்திய தமிழ் ஏடுகளுக்கும், சஞ்சிகைகளுக்கும் தடைவிதிக்கவேண்டுமென்ற கூப்பாடு; ஈழத் தமிழ் எழுத்தாளர்களை தென்னிந்திய பத்திரிகைகள் புறக்கணிக்கின்றன — அவமதிக்கின்றன என்ற சலசலப்பு; ஈழத்தமிழிலக்கியம் தென்னகத் தமிழிலக்கியத்திலிருந்து தனிமைப்படுத்தப்பட்டு, தனித்துவமாக வளரவேண்டுமென்ற பிரசாரம்; இவையெல்லாம் இந்த அடிப்படை நோக்கத்துடனேயே கிளப்பப் பட்டுவருகின்றன.

நான்காவது உலகத்தமிழ் மாநாட்டுக் கருத்தரங்கில் இலங்கைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. இ. தில்லைநாதன் அவர்களால் படிக்கப்பட்ட 'தமிழ் ஆக்க இலக்கிய வளர்ச்சியில் இலங்கையின் பங்கு' எனும் கட்டுரை நான் மேலே குறிப்பிட்ட 'இந்திய விரோதக்' குழுவினரின் கருத்துக்களையே பிரதிபலிப்பனவாக அமைந்திருந்தது.

இலக்கியத்துறையில், தமிழ் மக்களின் உண்மையான சிந்தனைகளைப் பிரதிபலிப்பவர்களின் படைப்புக்களை பற்றிக்குறிப்பிடாமல் ஒதுக்கிவிட்டு, பெரும்பான்மையான தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படாத சிந்தனைகளை பிரதிபலிப்பவர்களான ஒரு குறிப்பிட்ட குழுவினரையே திரு. தில்லைநாதன் தமது கட்டுரையில் சுட்டிக்காட்டி ஈழத்தமிழர்களின் உணர்வுகளை அவர்களது படைப்புக்களே சித்திரித்துக் காட்டுகிறதென்றும் தமது கட்டுரையில் தெரிவித்தார்.


ஈழவேந்தன்.

தென்னிந்திய துவேஷத்தை உருப்போடுவதற்காக, எப்பொழுதோ இலங்கைக்கு வந்து ஏதோ அலட்டிச் சென்ற பகீரதனையும், திரு. தில்லைநாதன் தமது கட்டுரைக்குள் கொண்டு வந்து நுழைத்திருந்தார்.

(சிறுகதைத் துறையில் இலங்கை பத்துவருடங்கள் பின்தங்கி நிற்கிறது என்று பகீரதன் கூறிவிட்டார் என்பது தில்லைநாதனின் குற்றச்சாட்டு. திரு. தில்லைநாதனும் அவரைச் சார்ந்தவர்களும், பத்துவருடமல்ல— இன்னும் நூறு வருடங்களுக்கும் பகீரதன் சொன்ன பழைய கருத்திலேயே 'பின்தங்கி' நிற்பார்கள் போலும்!)

இலங்கைத் தமிழர்கள் "தென்னிந்திய நிழலிலே" ஒதுங்கிக் கிடக்காமல் இலங்கை மண்ணுக்குரிய தனித்துவமான தேசியப் பகைப் புலத்தில் தமிழிலக்கியத்தை வளர்க்கவேண்டுமென்பதும் திரு. தில்லைநாதன் தெரிவித்த மற்றோர் கருத்தாகும்.

திரு. தில்லைநாதனின் இந்தக் கட்டுரைதான் கருத்தரங்கில் படிக்கப்பட்ட முதலாவது கட்டுரையாகும்; பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமையில் நடைபெற்ற வீரசிங்கம் மண்டபக் கருத்தரங்கில் மேற்கண்ட தமது கட்டுரையை தமிழில் வாசித்த திரு. தில்லைநாதன், பின்னர் டாக்டர் சாலே இளந்திரையன் தலைமையில் பிறிம்மர் மண்டபத்தில் நடைபெற்ற மற்றோர் ஆங்கிலக் கட்டுரையையும் வாசித்தார்; ஆங்கிலத்தில் புதிதாக ஏதாவது கருத்துக்களைத் தெரிவிக்கிறாரோ என்று அறிய மெத்த ஆவலோடு நான் கவனித்துக் கொண்டிருந்தேன். மிகப் பெரிய ஏமாற்றமே அடைந்தேன்.


திரு. தில்லைநாதன்,

தமிழில் ஏற்கெனவே படிக்கப்பட்ட கட்டுரையில் தாம் கூறியிருந்த அதே கருத்துக்களையே ஆங்கிலத்திலும் அவர் படித்துமுடித்தார்.

இதற்கு திரு. தில்லைநாதன் மீது குறைகூறுவதைவிட - இப்படி ஒரே கருத்துள்ள இரண்டு கட்டுரைகளை 'கல்வி ஆய்வு'க் குழுவினர் எப்படி அனுமதித்தனர் என்பது தான் எனக்குப் புரியாத புதிராக இருக்கிறது.

கருத்தரங்கில் ஆங்கிலத்திலும் தமிழிலும் படிக்கப்பட்ட தில்லைநாதன் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டிருந்த கருத்துக்களை மறுத்திடவும் ஈழத்தமிழர்களின் உண்மையான உணர்வுகளை பிரதிபலித்திடவும் கருத்தரங்கில் பங்குபற்றிய திருவாளர்கள் ஈழவேந்தன், கரிகாலன், அ. சிவராசா ஆகியோர் கிஞ்சிற்றும் தயங்கவில்லை.

திரு. அ. சிவராசா பேசுகையில் தில்லைநாதனின் கருத்துக்களை ஒப்புக்கொள்ள மறுத்தார். 1956ம் ஆண்டு இலங்கையில் சிங்களம் மட்டும் சட்டத்தின் காரணமாக உண்டான திருப்பம், பெரும்பான்மை மக்களுக்கு நம்பிக்கையையும் மாற்றத்தையும் ஏற்படுத்தியிருக்கலாம்; ஆனால் சிறுபான்மை மக்களிடையே-குறிப்பாக தமிழ் மக்களிடையே— இந்த மாற்றத்தினால் குறிப்பிடத்தக்க தாக்கம் ஏற்பட்டதென்று சொல்லமுடியாது என்று அவர் அழுத்தந்திருத்தமாக தெரிவித்தார்.


டாக்டர் சாலே இளந்திரையன்

'தமிழ் ஏந்தல்' ஈழவேந்தன், தம்முடைய கருத்துரையில் பின்வருமாறு கூறினார்:-

'சிங்களம் மட்டும் சட்டம் தமிழ் மக்களிடையே ஓர் எதிர்விளைவையே ஏற்படுத்தியது. அது தவிர சிங்களத் தேசிய விழிப்புணர்வுதான் தமிழ் இலக்கிய துறையில் வளர்ச்சியை மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது என்ற கூற்றை என்னால் ஏற்கமுடியாது. சிங்களம் மட்டும் சட்டத்தினால் நாம் நசுக்கப்படுகிறோம், அடக்கப்படுகிறோம், உரிமை மறுக்கப்படுகிறோம் என்கிற உணர்வுகளே தமிழ்த்தேசிய இனத்துக்கு ஏற்பட்டிருக்கின்றன.

தென்னகம், ஈழத்தைப் புறக்கணிக்கிறது — ஈழத்து அறிஞர்களை அவமதிக்கிறது- என்ற வாதமும் ஏற்புடைத்தல்ல. அன்றைய ஆறுமுக நாவலர், சதாவதானி நா. கதிரைவேற்பிள்ளை முதல் இன்றைய பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டிவரை இந்திய தமிழகத்தால் பாராட்டப்பட்டு, கெளரவிக்கப்பட்டு வருகிறார்கள். இத்தகைய துவேஷப் பிரச்சாரங்களால் இந்திய தமிழகத்துக்கும் ஈழத்தமிழகத்துக்குமிடையே இருந்துவரும் தொன்மைமிக்க உறவை கெடுக்க முயலும் சக்திகளுக்கு ஈழத் தமிழர்கள் என்றுமே பலியாகமாட்டார்கள்! ஒரு பகீரதன் கூறிய கருத்து— தென்னகம் முழுவதுக்குமுரிய பொதுக்கருத்தல்ல— பகீரதன் என்ற யாரோ ஒரு தனிமனிதரின் கருத்தைபெரிதாக எடுத்து அதையே எல்லாவற்றுக்கும் எடுத்துக் காட்டுவது எமது சிறுமைத்தனத்தைக் காட்டுமே தவிர பெருந்தன்மையையல்ல!

தென்னக ஏடுகளை தடை செய்யவேண்டும்; அப்படி தடைசெய்தால் மட்டுமே ஈழத்து இலக்கியம் வளரும் என்ற கூச்சலும் அர்த்தமற்ற கூச்சலாகும். ஒன்றின் தடையால் மற்றொன்று வளர்ந்து விடாது! தென்னிந்தியப் பத்திரிகைத் தடையால் ஈழத்தில் தமிழ் சஞ்சிகைகள் எதுவும் குறிப்பிடத்தக்க அளவில் வளர்ச்சிபெற்று விடவில்லை; ஒன்றின் தடை இன்னொன்றின் வளர்ச்சியாகமுடியாது; போட்டியிட்டு இலக்கியம் வளர வேண்டுமே தவிர தடைசெய்து இலக்கியத்தை வளர்க்கமுடியாது. அப்படி தடைசெய்வது - நம்மை வெறும் கிணற்றுத் தவளைகளாக்கிவிடும்!

அடிப்படையில் — ஈழத்தில் நாம் இனத்துக்கும் மொழிக்கும் நிலையான பாதுகாப்பு இல்லாத சூழ்நிலையில் — தென்னகத்தின் நிழலில் நின்றே நாம் இலக்கியம் வளர்க்க வேண்டும்— இதில் வெட்கப்படுவதற்கு ஒன்றுமில்லை!''

இவ்வாறு ஈழவேந்தன் கருத்துத் தெரிவித்து அமர்ந்தபின் — திரு. கரிகாலன் கொஞ்சம் சூடாகவே தமது எண்ணங்களை பின்வருமாறு வெளியிட்டார்:-

''1956ம் ஆண்டின் பின்னர் தமிழ் இலக்கியத்துறை

(9-ம் பக்கம் பார்க்க)

கோவை மகேசன்

## எண்ணம்

# பாவம், சனநாயகம்!

சனநாயக வழிமுறைகளைப் பின்பற்றுவதாகக் கூறப்படும் ஒரு நாட்டில், வன்முறைகளும் அராஜகங்களும் தலைதூக்குவதை சனநாயகத்தின் மீது பற்றும் பாசமும் கொண்டோர் யாரும் கிஞ்சிற்றும் விரும்பமாட்டார்கள்; அதை அனுமதிக்கவும் மாட்டார்கள்!

சனநாயக மரபுகளையும் சம்பிரதாயங்களையும் உரிமைகளையும் பேணிப்பாதுகாத்து, மக்களை சனநாயகநெறியில் அழைத்துச் செல்வது, சனநாயகநாடு என்று கூறப்படும் ஒரு நாட்டில் இயங்கும் அரசியற் கட்சிகளின் நீங்காக் கடமையாகும்!

இலங்கையும் ஒரு சனநாயக நாடு என்றே கூறப்படுகிறது; மக்களும் அப்படியே நம்பவைக்கப்படுகிறார்கள்!

சனநாயகத்தை நான்தான் காப்பாற்றுகிறேன் என்று அரசாங்கக்கட்சியும், இல்லை நான்தான் காப்பாற்றுகிறேன் என்று ஐக்கிய தேசியக்கட்சியும் — ஆக இரண்டு சிங்களக் கட்சிகளுமே — ஒன்றுடன் ஒன்று மோதிக்கொள்ளுகின்றன!

அரசாங்கம், சனநாயக விரோத நடவடிக்கைகளைப் பின்பற்றுவதாகக் குற்றம் சாட்டி — அதைக் கண்டித்து நாடெங்கும் கண்டனக் கூட்டங்களை நடத்தப்போவதாக ஐ. தே. கட்சி அறிவித்தது.

ஐ. தே. கட்சி சனநாயகத்தை கொன்றொழிக்கப்பார்க்கிறது; அதற்கு நாம் அனுமதிக்கமாட்டோம் என்று கூறி, அவசரகாலச்சட்ட விதிகளையும் ஊரடங்குச் சட்டத்தையும் ஏவி விட்டு அக்கூட்டங்களைத் தடைசெய்தது அரசாங்கம்!

இப்படி சனநாயகத்தின் பெயரால், அரசாங்கமும் ஐ. தே. கட்சியும் ஒன்றுடன் ஒன்று மல்லுக்கட்டும்போது— அதிகாரத்துக்காக மோதும் போது — உண்மையிலேயே இந்நாட்டில் சனநாயகம் என்று ஒன்று உயிரோடு இருந்திருக்குமானல் — அதுதான் மிதிபட்டு, நசிபட்டு இறந்து போகிறது. இரண்டு கட்சிகளுமே சனநாயகத்தை கொலை செய்து வருகின்றன!

இந்த விஷயத்தில் அரசாங்கக்கட்சியையே நாம் வெளிப்படையாக குற்றம் சாட்டவிரும்புகிறோம்!

ஏனெனில், சனநாயக மரபுகளையும் உரிமைகளையும் பேணிப் பாதுகாப்பதில், அதிகாரத்திலிருப்பவர்களே மிகுந்த எச்சரிக்கையையும் நிதானத்தையும் கடைப்பிடித்திட கடமைப்பட்டவர்கள்!

அதுவும் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை கொண்ட அரசுக்கு, சர்வாதிகார உணர்வுகள் ஏற்படுவது இயல்பானது. அந்த உணர்வுகளுக்கு கிஞ்சிற்றும் இடந்தராது — மிகுந்த அடக்கத்துடனும், பொறுமையுடனும் பிரச்சினைகளை அணுகுவதே பொறுப்புள்ள — சன நாயக தர்மத்தின் மீது விசுவாசமுள்ள — ஓர் அரசின் கடமையாகும்!

ஆனல் அத்தகைய நிதானப்போக்கு இன்றைய அரசிடம் காணப்படவில்லையென்பது மட்டுமல்ல—சர்வாதிகார உணர்வுகளே அங்கு தலைவிரித்தாடுவதையும் மக்கள் கவனித்துக்கொண்டு வருகிறார்கள்!

இதற்கு உதாரணங்களாக பல சம்பவங்களைக் காட்டலாம்! அத்தனகலையில் நடந்த நிகழ்ச்சியும் — அரசாங்கக் கட்சி பா. உ. ஒருவரிடம், அவரது தொகுதி மக்கள் கோரிக்கையொன்றை சமர்ப்பிக்க சென்றபோது, அவர்கள் குண்டர்களால் தாக்கப்பட்டதாக வெளிவந்த செய்தியும்—மக்களுக்கு தெரிந்தவையே!

சனநாயகத்தின் எடுத்துக்காட்டாக விளங்கவேண்டிய தேசிய அரசுப்பேரவையில், கடந்த மே எட்டாம் நாள் அரசுக்கட்சியினருக்கும் ஐக்கியதேசியக்கட்சியினருக்குமிடையே நடை பெற்றதாக கூறப்படும் கைகலப்பு — சனநாயக உணர்வுபடைத்தவர்களை தலை குனிய வைத்துவிட்டது!

அராஜகம், வன்முறை கொஞ்சமும் தலை காட்டக் கூடாத இடம் தேசிய அரசுப்பேரவை! பொறுமை சகிப்புத் தன்மை, ஒருவர் கருத்தை மற்றவர் மதித்தல், போன்ற சனநாயகப்பண்பாடுகளின் தொட்டிலாக இருக்க வேண்டிய இடம் தேசிய அரசுப்பேரவை! நாட்டு மக்களுக்கு சனநாயக மரபுகளையும் உணர்வுகளையும் எடுத்துக் காட்டிப் போதிக்கும் ஒரு செயல் முறைக் கல்லூரியாக விளங்கவேண்டியது தேசிய அரசுப்பேரவை!

அத்தகைய சபையில் — ஐ. தே. கட்சியினரும் அரசாங்கக்கட்சியினரும் ஒருவரை ஒருவர் அடித்துக்கொண்டதாக வந்த செய்தியும் 'அரசு பா உ.க்கள் இருவர் பின் பக்கமாக வந்து கல்குடா பா. உ. திரு. தேவநாயகத்தைத் தாக்கியதாக' யூ. என். பித் தலைவர் ஜே. ஆர். ஜெயவர்த்தன குற்றம் சாட்டியுள்ளதும், வன்முறை தேசிய அரசுப் பேரவைக்குள்ளும் நுழைந்து விட்டதோ என்ற ஐயத்தையே மக்களுக்கு ஏற்படுத்துகிறது!

காங்கேசன்துறை இடைத்தேர்தலை, வடபகுதியில் நடைபெற்றுவரும் வன்முறை காரணமாகவே நடத்தமுடியவில்லை என்றுபோலிச் சாட்டு கூறிவரும் அரசாங்கக் கட்சியினர் தேசிய அரசுப் பேரவையிலேயே நடைபெற்றதாக கூறப்படும் இந்த அநாகரிக வன்செயலுக்கு — அதுவும் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த பிரதிநிதி ஒருவருக்கு எதிராக நடைபெற்ற வன்செயலுக்கு — என்ன பதில் சொல்லப்போகிறார்கள்!

சபாநாயகர் அன்று சபையில் இருந்திருந்தால் ஒரு வேளை இந்த நிலை தோன்றாமல் தவிர்த்திருக்கக் கூடும்!

**சனநாயக அமைப்பை காப்பாற்றினல் மட்டும் போதாது; சனநாயக உணர்வுகளையும் காப்பாற்றி வரவேண்டும் என்பதை எதிர்க் கட்சியினரும் அரசுக் கட்சியினரும் உணர்ந்தாகவேண்டும்!**

தேசிய அரசுப்பேரவையில் **மே எட்டாம் நாள் நடைபெற்ற நிகழ்ச்சி—இதுவே கடைசியும் முதலுமாக இருக்கட்டும்!**

# கேட்டுப் பாருங்கள்!

இராமலிங்கம்,
அச்சுவேலி.

கே: யூ. என். பி. நடத்தி வரும் சத்தியாக்கிரகம்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: அது ஒரு கேலிக்கூத்து. சத்தியாக்கிரகம் எப்படி நடத்தப்படவேண்டும் என்பதை 1961ம் ஆண்டு தமிழரசுக்கட்சி இந்நாட்டில் முதன் முதலாக நடத்திக் காட்டியிருக்கிறது. இரண்டு மாதங்கள் தொடர்ச்சியாக தமிழர்கள் அன்று சத்தியாக்கிரகம் செய்தனர். யூ. என். பி யோ இரண்டு மணித்தியாலங்களுடன் திருப்தியடைந்துவிடுகிறதே!

கே: அந்நியர்களுக்கு எதிராக காந்திஜி பின்பற்றிய சாத்வீக சட்டமறுப்பை, சிங்கள அரசுக்கு எதிராக தமிழர்கள் பின்பற்றுவது தவறானது என்ற பெரியார் சிவசுப்பிரமணியத்தின் கருத்தைப் பற்றி என்ன கூறுகிறீர்கள்?

ப: பெரியார் சிவசுப்பிரமணியம் ஐயாவை நான் மதிக்கிறேன். ஆனல் அவர் கூறிய கருத்தை ஏற்றுக் கொள்ளமுடியாது. ஈழத் தமிழர்கள், தங்கள் உரிமைகளுக்காக சாத்வீக சட்டமறுப்பு, சத்தியாக்கிரக இயக்கங்களில் ஈடுபடுவதற்கு மகாத்மா காந்தியே அனுமதியளித்திருக்கிறார்! மகாத்மா காந்தியடிகள் இலங்கைக்கு வருகை தந்த போது, அவரை வரவேற்ற அப்போதைய வாலிபர் காங்கிரசில் இருந்த சில தமிழ் இளைஞர்களிடம் இலங்கையின் விடுதலைப் போராட்டத்தில் தமிழர்களாகிய நீங்களும் சிங்களவர்களுடன் சேர்ந்து ஒத்துழைத்தாலென்ன என்று கேட்டிருக்கிறார். அதற்கு, அந்த இளைஞர்கள், "அப்படி செய்ய எங்களுக்கும் விருப்பம்தான் அடிகளே! ஆனல் வெள்ளைக்காரன் போனபின், அந்த இடத்தில் சிங்களவர்கள் அமர்ந்து நம்மை இம்சைப்படுத்தினல் என்ன செய்வது என்பதே எங்கள் அச்சம் என்றார்கள்— அதற்கு காந்தியடிகள் கூறிய மறுமொழி என்ன தெரியுமா? "இதே ஆயுதத்தை-அதாவது சாத்வீக சட்ட மறுப்பு, சத்தியாக்கிரக இயக்கங்களை—நீங்கள் அவர்களுக்கெதிராக அப்போது தாராளமாக பயன்படுத்தலாம்!" என்பதுதான். இப்படிக் காந்தியடிகள் தம் வாயால் கூறியதை நேரடியாக காது கொடுத்து கேட்டவர்கள் சிலர், இன்றும் உயிருடன் இருக்கிறார்கள்! எனவே பெரியார் சிவசுப்பிரமணியத்தின் கருத்து ஏற்புடைத்தல்ல!

ஃ

வை. பரமானந்தன்,
முத்துலட்சுமி,
பொகவந்தலாவை.

கே: தோட்டப் பாடசாலைகளை அரசாங்கம் கையேற்றால் அங்கு படிக்கும் தமிழ் மாணவர் நிலையென்ன?

ப: சிங்களம் மெல்ல நுழைந்துவிடும் என்று அஞ்சுகிறீர்களா? உங்கள் அச்சம் எனக்கும் உண்டு.

ஃ

அழகர் ஜெயராமு,
பொகவந்தலாவை.

கே: தமிழ் வராத தலைவனுக்கு தமிழனின் சேவை எதற்கு?

ப: தமிழ்வராத அப்துல் அஸீஸ்களை ஏன் உங்கள் தலைவர்களாக்கி வைத்திருக்கிறீர்கள்?

ஃ

செல்வி சிவகுமாரி,
சின்னத்துரை,
கீரிமலை.

கே: மாட்டின் எங்கே? வனவாசத்துக்கு போய்விட்டாரா?

ப: 'தலையினிழிந்த மயிரனையர் மாந்தர் — நிலையினிழிந்தக்கடை'— இதுதான் மாட்டின் வனவாசத்தின் காரணம்!

ஃ

செல்வன் மகேஸ்வரன்,
கைதடி நுணுவில்.

கே: கலாநிதி கோபாலப் பிள்ளை மகாதேவா அண்மையில் செயலாளர் பதவியிலிருந்து ராஜினமா செய்தது எதற்காக?

ப: ஏன் என்பது அவரது இதயத்துக்குத்தான் தெரியும்! பகிரங்கமாக அவர் எதையும் கூறவில்லை!

ஃ

சபா. சிவராஜ்
கண்டிவீதி
ஓமந்தை

கே: இலண்டன் பி. பி. சி. தமிழோசைநிகழ்ச்சி ஆரம்பமாகும்போது தமிழ் மக்களின் மங்கள இசையாகிய நாதஸ்வரத்துடன் ஆரம்பமாகிறதே — 35 லட்சம் தமிழ் மக்கள் வாழும் ஈழ நாட்டிலிருந்து ஒலிபரப்பாகும் தமிழ் நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கும்போது எமது பாரம்பரிய இசைக்கு முதலிடம் கொடுக்காத காரணம் யாதோ?

ப: தமிழினம் இந்நாட்டில் ஆளப்படும் இனமாக இருப்பதுதான்!

| |
|---|
| திருவாளர் |
| குயுக்தியார் |
| மே/பா சுதந்திரன் |
| 194 ஏ. பண்டாரநாயகா வீதி, கொழும்பு-12. |

## "அறு வடை" அறிமுக விழா

ஈழத்து புதுக்கவிதை துறையின் முன்னேடியும் சிறுகதை எழுத்தாளருமான பூநகர் மரியதாஸின் "அறுவடை" என்னும் புதுக் கவிதை தொகுப்பு நூலின் அறி முகவிழா கொக்குவில் மேற்கு சன சமூக நிலைய மண்டபத்தில் கா. பொ. இரத்தினம் தலைமையில் நடை பெறவிருக்கிறது இவ்விழாவில் நூல் அறிமுக உரையை இ. மகாதேவன் நிகழ்த்த திக்கவயல் தர்மகுலசிங்கம், காரை சுந்தரம் பிள்ளை ஆய்வுரை நிகழ்த்துகின்றனர். சிறப்புச் சொற்பொழிவுகளை என், சந்திரமோகன் அன்பு - ஜவகர்ஷா விவேகானந்தன், டானியல் அன்ரனி, ஆகியோர் நிகழ்த்துவர்.

## சிங்களம்

((1-ம் பக்கத் தொடர்ச்சி)

நான் சுட்டிக்காட்ட வேண்டியதில்லை,

எனவே 11தேர்தல் தொகுதிகளையுடைய யாழ் மாவட்டத்திற்கு வதளை, மொனராகலை கண்டி அனுராதபுரம் குருநாகலை முதலிய மாவட்டத்திற்கு ஒதுக்கியதைப் போலக் குறைந்தது 130 லட்சமாகுதல் ஒதுக்கிக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

———

## மாநில...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

'தமிழன் என்றொரு
இனமுண்டு—தனியே
அவர்க்கொரு குணமுண்டு'

என்கிற பாடலை நெஞ்சில் ஏந்தியவர்தான் இங்கே இருக்கவேண்டும்.

மாநில சுயாட்சி லட்சியத்திற்காகச் சிறை செல்வோர் எங்களோடு வாருங்கள். வேறு வேலை இருப்போர் ஒதுங்கிக் கொள்ளுங்கள்! சிறை செல்ல வேண்டுமே என்று பயப்படுவோர் வேறு இடம்தேடிக் கொள்ளுங்கள். அண்ணு தந்த லட்சியத்தை நிறைவேற்றிடும் உண்மையான தொண்டர்கள் மட்டும் வாருங்கள்.'

———

## தமிழர் கூட்டணி திட்டக் குழு கூடுகிறது.

தமிழர் கூட்டணியின் திட்டக் குழு 18-5-74 காலை 10 மணிக்கு யாழ்ப்பாணத்திலுள்ள கூட்டணித்தலைமைச் செயலகத்தில் கூடுகிறது. குடியரசுதின பகிஷ்கரிப்பு ஏற்பாடுகள், சிறையிலுள்ள தமிழ் இளைஞர்கள் பற்றிய பிரச்சினை உட்பட பல்வேறு விடயங்களையொட்டியும் திட்டக்குழு ஆராயவிருக்கிறது.

## குடியரசு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எந்த விதமான நிகழ்ச்சிகளிலும் தமிழ் மாணவ மாணவியர் பங்குபற்றாது அவற்றை பகிஷ்கரித்து தமிழினத்தின் தன்மானத்தை நிலைநாட்டவேண்டுமென்றும் தமிழ் பெற்றோர்களும் இத்தகைய நிகழ்ச்சிகளுக்கு தங்கள் பிள்ளைகளை அனுப்பக்கூடாது என்றும் திரு. அமிர்தலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவ்வேண்டுகோளில் அமிர்தலிங்கம் மேலும் தெரிவித்திருப்பதாவது:—

தமிழ் பேசும் மக்களை இந்நாட்டில் அடிமை நிலைக்குத் தள்ளி, அவர்களை அவமதித்துள்ள புதிய குடியரசு அரசியல்சட்டம்நடைமுறைக்கு வந்த நாள் தான் மே 22: 1972ம் ஆண்டு மே 22-ம் திகதியன்று இக்குடியரசுச் சட்டம் வந்த நேரத்தில், தமிழ் பேசும் மக்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் பூரண ஹர்த்தால் அனுட்டித்து தொடர்ந்து மூன்று நாட்களுக்கு தங்கள் கடுமையான எதிர்ப்பைக் காட்டினர்.

கடந்த ஆண்டு மே 22-ல், புதிய அரசியல் சட்டத்தை எதிர்த்தும், தனது விடுதலை உணர்வைப் பிரதிபலிக்குமுகமாகவும், உதய சூரியன் கொடிகளை வைபவ ரீதியில் தமிழ் ஈழமெங்கும் ஏற்றி வைத்து, தமிழ்த் தேசிய கீதங்களை இசைத்து, தமிழினம் தனது உரிமை வேட்கையை உலகுக்கு உணர்த்திற்று.

கடந்த மே 22-க்கும் இந்த ஆண்டு மே 22-க்குமிடையே தமிழ் பேசும் மக்கள் மகிழ்ச்சியடையத்தக்க அளவில் அவர்களது உரிமைகளில்

(7-ம் பக்கம் பார்க்க)

# 'கிறெட்சர் ஆணைக்குழு' அறிக்கையை

# பேரவையில் உடுவில் பா. உ. சமர்ப்பித்தார்!

## உரிய நடவடிக்கை எடுக்கும்படி பிரதமருக்கு வேண்டுகோள்!

நான்காவது உலகத் தமிழ் மாநாட்டின் இறுதி நாளன்று (சனவரி 10) தமிழ் மக்கள் மீது பொலீசார் நடத்திய மிலேச்சத்தனமான தாக்குதல்பற்றி விசாரணை நடத்திய கிறெட்சர் ஆணைக்குழுவின் தீர்ப்பு, மே.8ம் நாள் தேசிய அரசுப் பேரவையில் உடுவில் பா.உ. திரு. வி. தர்மலிங்கம் அவர்களினால் சமர்ப்பிக்கப் பட்டது.

சபையில் அமர்ந்திருந்து உடுவில் பா.உ.வின் பேச்சை மிக உன்னிப்பாக கவனித்துக்கொண்டிருந்த பிரதமரிடம் திரு. தர்மலிங்கம் கிறெட்சர் ஆணைக்குழுவின் தீர்ப்பு அடங்கிய பிரதியொன்றைக் கையளித்தார்.

திரு. தர்மலிங்கம் அங்கு பேசுகையில் கூறியதாவது:-

'உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரும், நீதியமைச்சருமான திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா பேசும்போது, டெயிலி நியூஸ் பத்திரிகையில் வெளிவந்த "ஜனநாயகத்தின் மரண அறிவித்தல்" விளம்பரத்தைப் பற்றிக் குறிப்பிட்டார். அந்த விளம்பரத்தையொட்டி டெயிலி நியூஸ் பத்திரிகையில் அதன் பின்னர் திருத்தமோ மறுப்போ வெளிவராத காரணத்தினால், அந்த விளம்பரத்தை நாங்கள் உண்மையென்றே கொள்ளவேண்டும்.

"தென்னிலங்கையைப் பொறுத்தவரை ஏப்ரல் 20ம் திகதிதான் சனநாயகம் சாகடிக்கப் பட்டிருக்கிறது. ஆனால் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலோ ஜனநாயகம் என்றோ சென்றொழிக்கப்பட்டு விட்டது. வடக்கு, கிழக்கு மாகாண மக்களிடமிருந்து ஜனநாயக உரிமைகள் பறிக்கப்பட்டு நீண்டகாலமாகின்றன. காங்கேசன்துறைத் தொகுதி வாக்காளர்களுக்கு கடந்த ஒன்றரை வருடகாலமாக தங்கள் பாராளுமன்ற உறுப்பினரைத் தெரிந்தெடுக்கும் சனநாயக உரிமை மறுக்கப்பட்டுவருகிறது.

### பரமார்த்த குரு கூறியது என்ன?

எச். எம். நவரத்தின:- (குறுக்கிட்டு) மன்னாரில் என்ன நடந்தது?

தர்மலிங்கம்:- மன்னார் இடைத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற்றபோது, யாழ்ப்பாணத்திலுள்ள உங்கள் பரமார்த்த குருவும், சிஷ்யர்களும் மகிழ்ச்சியடைந்தார்கள். அதை ஒரு தேசியக்கட்



சியின் வெற்றியென்று ஆடிப்பாடி மகிழ்ந்தார்கள். ஆனால் இன்றைக்கு நீங்கள் ஐ. தே. கட்சியை பிற்போக்குக்கட்சியென்று கூறுகிறீர்கள்! இதில் யார் கூறுவது சரியென்று எனக்கு விளங்கவில்லை;

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கூட்டங்கள் நடத்துவதற்கு எமது கட்சிக்கு தடை ஏதும் விதிக்கப்படவில்லையென்று இங்கு தெரிவிக்கப்பட்டது. சட்டத்தினால் தடை விதிக்கப்படவில்லையென்பது உண்மைதான் ஆனால் பொலீசாரின் மூலமும், நிர்வாக நடவடிக்கைகளாலும் எமது கூட்டங்களை நடத்தவிடாமல் தடுக்கிறீர்கள்.

### செல்வா பிறந்த நாள்

ஒரு கூட்டத்துக்கு ஒலிபெருக்கி அனுமதி கோரி விண்ணப்பித்தால், பொலிசார் அனாவசிய கேள்விகளையெல்லாம் கேட்கிறார்கள்; அரசியல் பேசாதே என்கிறார்கள்; அமிர்தலிங்கம் பேசக்கூடாது என்கிறார்கள். இப்படி குறுக்கே பலவித முட்டுக்கட்டைகளையும் போட்டு காலதாமதப்படுத்திவிட்டு, கடைசி நேரத்தில் அனுமதி தரமுடியாதென்று கூறுகிறார்கள். சிலவேளைகளில் அனுமதி தந்தாலும் கூட்டத்துக்கு குறிக்கப்பட்ட நாளில், அல்லது அதற்கு முதல்நாளில் அனுமதி தருகிறார்கள். இப்படிச் செய்தால் நாம் எப்படி கூட்டங்கள் நடத்தமுடியும்?

தந்தை செல்வாவின் பிறந்தநாள் விழாவை மார்ச் 31ம் திகதி கொண்டாடவிருந்தோம். ஒரு மாதத்துக்கு முன்னரே பொலிசாரிடம் ஒலிபெருக்கி அனுமதி கோரி இதற்காக நாம் விண்ணப்பித்திருந்தும், மார்ச் 30ம் திகதியே இதற்கான அனுமதி கிடைத்தது. இதன் காரணமாக அந்த விழாவை நாம் நடத்தமுடியாமல் போய்விட்டது.

### கலாசார கூட்டங்களுக்கும் தடை

தென்னிலங்கையில் அரசியல் கூட்டங்களை நடத்துவது மட்டும் தடுக்கப்பட்டிருக்கிறது. வடக்கு, கிழக்கிலோ அரசியல் கூட்டங்களை மட்டுமன்றி, கலை கலாச்சார விழாக்களை நடத்தும் உரிமை கூட தமிழ் மக்களுக்கு மறுக்கப்பட்டுவருகிறது.

தமிழ் மக்கள் தாம் விரும்பிய இடத்தில் தங்கள் மொழி, கலாசாரம் சம்பந்தப்பட்ட மாநாட்டை கூட நடத்துவதற்கு இந்நாட்டில் உரிமையற்றவர்களாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள்.

நான்காவது அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டை கொழும்பில் தான் நடத்தவேண்டும்; கொழும்பில் நடத்தினால் மட்டுமே அரசாங்கத்தின் ஆதரவும் ஒத்துழைப்பும் கிடைக்கும் என்று பாதுகாப்பு துணை அமைச்சர் கூறியிருந்தார். இது தமிழ் மக்கள் தாம் விரும்பிய இடத்தில் தங்கள் கலாசார மாநாட்டை நடத்தும் உரிமையை முற்றாக மறுக்கும் செயலாகும்.

யாழ்ப்பாணத்திலேயே மாநாட்டை நடத்துவது என சம்பந்தப்பட்டவர்கள் முடிவெடுத்தபோது, அரசு வெளிநாட்டு அறிஞர்களுக்கு விசா தர முடியாதென கைவிரித்து—கடைசியில் மாநாடு தொடங்குவதற்கு மூன்று நாட்களுக்கு முன்னர்தான் விசா வழங்க ஒப்புக்கொண்டது. இதன் காரணமாக மாநாட்டுக்கு வந்திருக்க வேண்டிய அறிஞர் பலர் வரமுடியாமல் போய்விட்டது. ஏற்கனவே வந்த பல அறிஞர்கள் விமான நிலையத்திலேயே வைத்து பலவந்தமாக திருப்பி அனுப்பப்பட்டனர்.

### மிருகத்தன தாக்குதல்

இவ்வளவுக்கும் பின்னர் மாநாடு தொடங்கி ஒரு கிழமையாக நடந்து, சனவரி 10-ம் நாள முடிவுற்றது. சனவரி 10-ம் திகதி நடைபெற்ற சம்பவங்கள் உங்களுக்கு தெரியும். திருச்சி ஜமீலியா கல்லூரி பேராசிரியர் நயினா முகம்மது பேசிக்கொண்டிருந்த நேரத்தில் — ஆண்களும், பெண்களும், குழந்தைகளுமாக 50,000 பேர் திரண்டிருந்த அக்கூட்டத்தில் — எதுவித காரணமுமின்றி ஆயுதப் பொலிசார் திடீரென நுழைந்து அமைதியாக இருந்த மக்களை அடித்தும் கண்ணீர்ப்புகை வீசியும் அன்று இழைத்துவிட்ட பெருங்கொடுமையை பற்றி உங்களுக்கு நன்கு தெரியும்!

அத்தனை கலையிலும், கொழும்பிலும் முக்கியமான தெருக்களில் எல்லாம் மக்கள் உட்கார்ந்து சத்தியாக்கிரகங்கள் நடத்திய போது — போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்டபோது - அதையெல்லாம் பொறுமையுடன் பார்த்துக்கொண்டு, அமைதியாக இருந்த பொலிசார், யாழ்ப்பாணத்தில், ஒரு கலாசார விழாவில் மகிழ்ச்சியுடன் கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் மீது —வீதிப்

(8-ம் பக்கம் பார்க்க)

# ஈழத் தமிழா! உன்னைத்தான்...!

ஈழம் வாழ் தமிழ்க் குலமே! தரணியெங்கும் பரணி பாடிய திருக்குலமே!

வருகிறது மே 22, உனக்கு நினைவில்லையா?

குடியரசு தினமாம்; அந்நியஏகாதிபத்தியத்திலிருந்து இலங்கைமுற்றாக—முழுதாக விடுபட்டு, சிங்கள சிறீலங்காவாக மலர்ந்த தினம்தான்—இக்குடியரசு தினம்!

அடிமைத்தளைகள் அறுக்கப்பட்டு, நாட்டின் தன்னாதிக்கமும் இறைமையும் மக்களிடம் ஒப்படைக்கப்பட்ட தினம்தான் — இக்குடியரசு தினம்.

ஆம் உண்மைதான்! இந்நாட்டின் சிங்கள மக்களைப் பொறுத்தளவில், அவை முற்றும் உண்மைதான்; முழுதும் உண்மைதான்!

ஆனால் ஈழத்தமிழனாகப் பிறந்துவிட்ட நீ இக்குடியரசு தினத்தை கோலாகலமாகக் கொண்டாடுவதற்கு உரிமை உடையவன்தானா? சிந்தித்துப் பார்!

தனிக்கொடியுடன் தனியாட்சி புரிந்த நீ வெள்ளையனாலும், அதன்பின் சிங்களக் கொள்ளையனாலும் அடிமையாக்கப்பட்டு அற்பசொற்ப சலுகைகளை மட்டும் அனுபவித்து வந்தாய். அந்த அற்ப சொற்ப சலுகைகளையும் மட்டம்தட்ட சிங்கள ஆட்சி போட்ட சதித்திட்டம்தான் புதிய அரசியலமைப்புச் சட்டம், அதை நிறைவுபடுத்திய தினம்தான் இக்குடியரசு தினம்.

ஆம்! இக்குடியரசு தினத்தன்றுதான் உன் உரிமைக்குச் சமாதி கட்டப்பட்டது! இது உனக்கு குதூகலம் அளிக்கக் கூடியதா?

அந்நிய ஏகாதிபத்தியத்திலிருந்து முற்றாக, முழுதாக விடுபட்ட தினமாக, இக்குடியரசு தினத்தைச் சிங்கள மக்கள் கொண்டாடலாம். ஆனால் நீ கொண்டாடலாமா? சிங்கள ஏகாதிபத்தியத்திடம் முற்றாக முழுதாக அடிமைப்பட்ட தினமல்லவா இக்குடியரசு தினம்? எனவே உனக்கு மகிழ்ச்சி அளிக்கக் கூடிய தினமா இக்குடியரசு தினம்? குடிகெடுத்த தினமல்லவா?

கோட்டையிலே கோலோச்சிய உன் தமிழை, தெருக் கோடியிலே தூக்கியெறிந்துவிட்ட இக்குடியரசு தினத்தை நீ கொண்டாடுவதற்கு கொடுக்குக் கட்டலாமா? என்ன பைத்தியக்காரத்தனம்?

உன் மானம் எங்கே? மாண்டுவிட்டதா? இல்லையேல் அதுவும் சிங்களஏகாதிபத்திய சக்தியில் தாண்டுவிட்டதா?

மனிதனை மனிதன் மந்தை போல சந்தையிலே விலைகூறி விற்றநேரத்தில், "நாமார்க்கும் குடியல்லோம்" என சுந்தரத்தமிழிலே சுதந்திரப் பள்ளுப் பாடிய நீ சோரம் போவதா? சுதந்திரம் சாவதா?

மே 22 உரிமையற்ற அடிமையுற்ற ஈழத்தமிழனை உனது எதிர்கால விடுதலைக்கு வித்திட்ட தினமாக, அமையட்டும்;

குடிகெடுத்த இக்குடியரசு தினத்தை முற்றாகப் பகிஷ்கரித்து "குற்றேவல் புரிந்து கிடக்கும் வர்க்கமல்ல நாங்கள், நத்திப் பிழைக்க மாட்டோம், கோடி கொட்டிக் கொடுத்தாலும் மாற்றானுக்கு அடி வருட மாட்டோம். நாம் வேண்டுவது தனியரசு அதுவும் தமிழரசு'

**மார்க்கண்டு மணிமேகலை**

என்ற உனது உள்ளத்து உணர்வை திருமதிக்கும், சிறுமதிகளுக்கும் புரிய வைப்பாய். தெளிய வைப்பாய்.

"எலி வளையானாலும் தனி வளை வேண்டும்" என்ற பண்டையமுது மொழிக்கு இன்றைய சொந்தக்காரனை நீ தனியரசு கோருவது வியப்புக்குரிய ஒன்றல்ல. நீ உரிமை பெற்று ஆளப்பிறந்தன். உரிமையற்று மாழப் பிறந்தவன் அல்லன்;

அதுமட்டுமல்ல மனிதர்களின் தலையைச் சீவி மண்டை ஓடுகளை மாலைகளாக்கிப் போட்டுக்கொள்ளும் மகாபயங்கரமான காட்டுமிராண்டிகள் என மற்றையோரால் இழித்துப் பேசப்பட்டவர்கள்தான், இந்தியாவின் அசாம் மாநிலத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் குன்றுகள் சூழ்ந்த நாகநாட்டில் வாழ்கின்ற 5 லட்சம் நாகர்கள் ஆகும். அந்த 5 லட்சம் நாகர்களால் இன்று தனியாட்சி நடத்த முடியுமென்றால், பாண்டியன் பரம்பரையினனான நீ. சோழனின் சொந்தக்காரனை நீ, சேரனைச் சேர்ந்தவனை நீ, சங்கிலியனது சந்ததியினனான நீ, குளக்கோட்டனது குலத்தோன்றலாகிய நீ ஏன் தனியாட்சி நடத்த முடியாது?

உன் விவேகம்தான் கொஞ்சமா? அதில் வீரத்திற்குத் தான் பஞ்சமா?

இன்று சிறையில் வாடும், தங்கத்தமிழ் ஈழத்தின் வங்க நிகர் சிங்கக் காளைகளான எம் இளைஞர்கள் சிறையை விட்டு வெளியே வரும்போது நிச்சயமாக, எமது எதிர்கால விடுதலைக்கு வேண்டிய நல்ல பல திட்டங்களைத் தீட்டிக் கொண்டுதான் வெளிவருவார்கள்.

அவர்கள் தீட்டிய திட்டங்கள் அதிகார வெறிபிடித்த சிங்கள ஆட்சியினர்க்குமருந்தாக அமையட்டும். உனக்கு விருந்தாக அமையட்டும்.

இறுதியாக உன்னைத்தான் அழைக்கின்றேன். மறந்துவிடாதே! மே 22 உன் குடியைக் கெடுத்த தினம் உன்னை அடிமையாக்கிய தினம்.

எனவே அதை முற்றாகப் பகிஷ்கரிப்பாய்!

ஏனெனில் அது உன் இழவு நாள் — கரிநாள்!

எமது சிறுகதை

# மனிதர்கள் பலவிதம்

இ. என். ராசா

கடல் அலைகள் கரையோடு மோதி மோதித் திரும்புவதைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்த இராமநாதரின் உள்ளம் மனித வாழ்வைப்பற்றிக் கற்பனை செய்துகொண்டிருந்தது.

''அலைகள் எவ்வளவுதான் வேகமாக மோதினலும் கரையின் கட்டுப்பாட்டிற்குள் அடங்கி மீண்டும் கடலோடு அழுந்தி விடுகின்றன. மனித வாழ்வும் அப்படித்தான். விதியோடு எவ்வளவுதான் போராடினலும் அதன் கட்டுப்பாட்டிற்குள் அடங்கித்தான் ஆகவேண்டியிருக்கிறது.''

''ஏன் பேசாமல் இருக்கிறீர்கள்; எதைப் பற்றி இவ்வளவு சிந்தனை'' என்ற வசந்தியின் ஜில் என்ற கரம் தன் உடம்பிற் பட்டபோதுதான் உணர்வு பெற்றார் இராமநாதர்:

''இந்தக் கடற்கரைக்கு வந்த போதெல்லாம் ஏதாவது ஒரு உருக்கமான சம்பவத்தைச் சந்திக்கத் தவறியதே இல்லை, ஒரு வாரத்திற்கு முன்னர் சாவதற்கு ஓடிவந்த உன்னை இதே இடத்தில் சந்தித்தேன். கணவனல் கைவிடப்பட்டதால் சாகப்போகிறேன் என்ருய்'' — இராமநாதரை தொடரவிடாமல் இடைமறித்தாள் வசந்தி.

''என்னைத்தான் சாகவிடாமல் தடுத்து விட்டீர்களே அது முடிந்த கதை அடுத்து நடந்த கதை என்னவோ'' என்ருள் வசந்தி.

''நேற்று ஒருவனையும் அவன் இரண்டு குழந்தைகளையும் இதே இடத்திற்தான் சந்தித்தேன். அவனும் உன்னைப்போல் சாவதற்கு வந்தவன்தான்; நீ கணவனல் வெறுக்கப் பட்டவள், அவன் மனைவியால் ஒதுக்கப் பட்டவன்''

இதைக் கேட்டதும் வசந்தியின் முகம் மாறிவிட்டது:

''என் கதை இருக்கட்டும் அவன் கதையைச் சொல்லுங்கள் என்ருள் வசந்தி

''அவன் பெயர் சோமு'' என்ற இராமநாதர் அவன் கதையைச் சொன்னர்;

''ஆறு வருடங்களுக்கு முன் வசதியுள்ளவனக மனைவி மக்களுடன் வாழ்ந்தவன் சோமு, அவன் பொல்லாத காலத்தால் நோய் பற்றி படுக்கையில் விழுத்தி விட்டது. அந்தச் சமயத்தில் அவன் மனைவி இரண்டு குழந்தைகளையும் அவனுக்குப் பாரமாக்கிவிட்டு வேறு ஒருவனேடு ஓடிவிட்டாள். இன்று அவன் ஒரு அனதையாக அலைந்து கொண்டிருக்கிருன்; குழந்தைகளின் பசியையும் பட்டினியையும் பார்த்து வாழ முடியாமல் சாகத் துணிந்து விட்டான். இதுதான் அவன் சொன்ன கதை'' என்று இராமநாதர் சோமுவின் கதையைச் சுருக்கமாக விபரித்தார்;

''கதை உண்மையாக இல்லாவிட்டாலும் உருக்கமாக இருக்கிறது. இதற்குப் பணம் எவ்வளவு கொடுத்தீர்கள்?'' என்று வசந்தி சிரித்தாள்.

''இருபது ரூபா உதவினேன்—ஏன் அப்படிக் கேட்கிருய்?''

''பின்னே அவன் சொன்னதை உண்மை என்று நம்ப முடியுமா? யாரோ உங்களை ஏமாற்றியிருக்கிருன்'' என்ற வசந்தியின் கவனம் வேறெங்கோ நகர்ந்தது.

'அதோ பாருங்கள் அந்தச் சிறுவனை?'' இராமநாதர் அங்கே திரும்பிப் பார்த்தார்.

''அந்தச் சிறுவன் கட்டும் மணல் வீட்டை அலைவந்து கரைத்து விட்டது. இவ்வளவு நேரமாகப் போராடிப் பார்த்துவிட்டு தாயிடம் போய் முறையிட்டு அழுகிருன்'' என்று வசந்தி சொன்னதும் இராமநாதர் அடக்கமாகச் சிரித்துவிட்டுச் சொன்னர் 'நேற்றுச் சோமுவின் சிறுவன் ஒருவனும் இப்படித்தான் மணல் வீடு கட்டினன் — அவனுக்கு நடந்த கதியும் இதுதான்: அவன் ஓடிவந்து சோமுவிடம் முறையிட்டபோது சோமு என்னைப் பார்த்து என்ன சொன்னன் தெரியுமா? என் நிலையும் இந்தச் சிறுவனைப் போன்றதுதான் ஐயா! வாழ்க்கை என்ற வீட்டை நல்ல முறையில் கட்டுவதற்கு நான் பலமுறை முயல முயல வறுமை அலை அதைக் கரைத்துக் கொண்டேயிருக்கிறது என்று கூறிக் கண்ணீர் விட்டான்'' என்ருர் இராமநாதர்.

''இந்தக் கடலைப் பற்றி நான் என்ன நினைக்கிறேன் தெரியுமா, கரை என்ற நீங்கள் கம்பீரமாக இருக்கிறீர்கள் அலை என்ற நான் உங்களைவிட்டு விலகமனமின்றி அடிக்கடி உங்களிடமே ஓடி வருகிறேன் அவ்வளவு ஆசை,'' என்ற வசந்தி இராமநாதனின் கரம் ஒன்றைப் பற்றி அதை மெல்ல மெல்ல வருடினன்.

கள்ளன் அகப்பட்டு விட்டான் என்று கூறிக்கொண்டு ஒரு வாலிபன் ஓடிவந்தான். இராமநாதர் எழுந்து எங்கே என்ருர். இரண்டு சிறுவர்களையும் அவனையும் அதோ பொலிசார் கூட்டிக் கொண்டு வருகிருர்கள் என்ருன் அவன்.

இராமநாதர் வேகமாக நடந்து வீதிக்கு வந்தார். இரண்டு பொலிசாருடன் ஒருவனும் இரண்டு சிறுவர்களும் வந்து கொண்டிருந்தனர். சனக்கூட்டம் நிறைந்து கொண்டது. சனத்திரளை விலக்கிக்கொண்டு எட்டிப் பார்த்த இராமநாதர் திகைத்துவிட்டார். சோமு என்று வாய்திறந்து கத்தினர் சோமு தலை நிமிரவேயில்லை.

'இவன் பெரிய கள்ளன். சிறு பிள்ளைகளைக் கடத்தி வந்து தன் பிள்ளைகளாகச் சொல்லியாருக்காவது விற்றுப் பணம் சம்பாதிப்பது தான் இவன் தொழில் என்று ஒரு பொலிஸ்காரன் சொன்னதும் அதிர்ந்து விட்டார் இராமநாதர்.

வசந்தியை எண்ணினர்: அவள் சொன்னது உண்மை

(8-ம் பக்கம் பார்க்க)

---

# வாழப் பிடிக்கவில்லை..... ஆனால் வாழ்கிறேன்!

திராவிடச் செல்வன்

நான் காண்பது கனவா? இந்த உலகமே உயிரற்று உறங்கிக்கொண்டிருப்பது போன்ற பிரமை எனக்கு. தாங்கமுடியாத வேதனையுடன் ஒரு தூணின் அருகே போய்ச் சாய்கிறேன். எல்லையற்று என் உள்ளே எண்ண அலைகள் தோன்றித்தோன்றி வேதனைகளுக்கு உயிரூட்டிக் கொண்டேயிருக்கின்றன. எனக்கு இந்த உலகத்தில் வாழப்பிடிக்கவில்லை. விரக்தி மனப்பான்மை என்னுள் எவ்வாருே நுழைந்துவிட்டது: எழில் நிறைந்த இயற்கைக் காட்சியைப் பார்க்கின்றேன். முன்புபோல் என் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளவில்லை அது. என்னுள்ளத்தில் உத்வேகத்தையும் புத்துணர்ச்சியையும் தந்த அந்தப் பூங்கா பிணங்களைப் புதைக்கும் மயானமாகத் தெரிகிறது! அந்தப் பூங்காவிலே கூவிடும் குயிலின் ஓசை மயானத்திலே பிணம் உண்ணும் கழுகுகளின் குரலாகக் கேட்கிறது! எதிலும் இனிமை இல்லை. அவளை நினைக்கும்போது என்னுள்ளம் வேதனைத் தேம்பாடுகிறது!

எனது வாழ்க்கையில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்திய 'அவள்' இன்று வேறொரு திருப்பத்தை ஏற்படுத்திவிட்டாள். 'அவள்' இன்று இல்லாவிட்டாலும் என்னுள்ளம் 'அவளைப்' பற்றிய சிந்தனையிலேயே வட்டமிட்டுக்கொண்டிருக்கிறது.

'அவளுடைய' உயிரை இரையாக்கியது யமனல்ல— உமதுாதரல்ல — இந்தச் சமுதாயந்தான்; ஆம், இந்தச் சமுதாயந்தான் பயங்கர யமன். சீ! சமுதாயமா இது! சாதியின் பெயரால்—சமூகத்தின் பெயரால்-மதத்தின் பெயரால்-இடத்தின் பெயரால் மக்களை மக்கள் கூறுபோட்டு ஒரு கூட்டத்தை மற்றக்கூட்டம் பழித்து, நகைத்து வாழ்கிறதே! இந்தச் சமுதாயத்தின் கூறுபாட்டைப் போக்குவதே நான் 'அவளுக்குச்' செய்ய வேண்டிய கடமையாகும். அதற்காகத்தான் நான் உயிர்வாழ்ந்துகொண்டிருக்கிறேன். இன்றேல் என்றே-அவளுடன் என் உயிரையும் மாய்த்திருப்பேன்!

முதன்முதலாக அவள் நான் வேலைபார்த்த அலுவலகத்திற்கு நியமனம்பெற்று வந்தது இன்றும் என் உள்ளத்திரையைவிட்டு அகலவில்லை. 'அவளி'டத்தில் இருந்த அடக்கம், அமைதி என்னை ஆரம்பத்தில் கவரத் தொடங்கியது. இறுதியில் அவளுடைய அன்புக்கும் இலக்காகிவிட்டேன்.

தனது தந்தையை இழந்து இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன என்று 'அவள்' கூறிய பொழுது என் உள்ளம்பட்ட வேதனையை என்னென்பேன். 'அவளுடன்' கூடப் பிறந்தவர்கள் மூவர். மூவரும் பெண்கள். எல்லோருக்கும் மூத்தவள் 'அவள்' தான். 'அவளது' குடும்பம் வாழ்ந்துவந்ததென்றல் அது 'அவளுடைய' வருமானத்தில்தான். தந்தை சேமித்து வைத்த பணம் ஏதும் அவர்களிடம் இல்லை. கள் இறக்கும் தொழில் செய்த அவளுடைய தந்தையால் குடும்பத்தையே கஷ்டமின்றிக் கொண்டு செல்ல முடியவில்லை என்றல் மேலதிகமாக எச்சொத்தைச் சேமித்து வைக்கமுடியும்! அந்தக் கஷ்டத்திலும் தன்னைப் படிப்பிப்பதற்கு தந்தை எடுத்த பிரயத்தனங்களை அவள் சொல்லும்பொழுது ஊரி மனந்தான் வேதனையுருது!

'அவளுடைய' கெட்டித்தனத்தால் ஒரு எழுதுவினைஞராக வேலை பெற்றுவிட்டாள். தகப்பன் இறந்த இரண்டு ஆண்டுகளுக்குள்ளும் அவள் குடும்பம் பட்ட வேதனைகளை அறிந்து நான் மனம் வருந்தினேனென்றல் அதில் ஆச்சரியமில்லை.

இந்த நிலைகளே நான் 'அவள்' மீது கொண்ட அன்புக்குக் காரணம். நான் 'அவள்மீது கொண்ட இரக்கமும், அவள் என் மீது கொண்ட அன்பும் காதலாக மலர்ந்தது. எங்கள் காதல் வளர்ந்துவந்தது. விடுமுறை நாட்களில் நானும் அவளும் அந்தப் பூங்காவிற்குத்தான் செல்வோம். எங்காவது ஒரு மரத்திற்குக்கீழ் அமர்ந்து மனம் திறந்து பேசுவோம்; அப்பொழுது அந்தப் பூங்காவின் இயற்கை எழில் எங்கள் உள்ளத்திற்கு மகிழ்வைத் தந்தது. அங்கே கூவிடும் குயிலின் ஓசை இனிய கீதமாக எங்கள் உள்ளத்தைத் தொட்டன.

'வாழ்வென்னும் பூங்காவில் அன்பென்னும் மொட்டு காதலென்னும் மலராக மலர்கிறது. அது உறுதி என்னும் காயாகி திருமணம் என்னும் கனியாவதற்கு முன் விதியென்னும் சில தடையங்கள் ஏற்படுகின்றன. இந்தத் தடை எனது வாழ்விலும் ஏற்படத் தொடங்கியத.

எங்களது அலுவலகக் காதல் எனது வீட்டாருக்குத் தெரிந்தது.

அன்றொருநாள் அலுவலகத்திற்குப் போய் கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தேன். எனது பெயருக்கு முகவரியிடப்பட்ட கடிதம் ஒன்று எனது மேசையில் கொண்டுவந்து வைக்கப்பட்டது. கடிதத்தைப் பார்த்ததும் அது என்னுடைய தந்தையிடமிருந்து வந்திருக்கிறதென்பதை ஊகித்துக் கொண்டேன். பிரித்துவாசித்தேன். அதில் இருந்த வாசகங்கள் என்னை நிலை தடுமாற வைத்தன.

தந்தையென்ற முறையில் அவர் என்னைக் கண்டித்து எழுதியிருந்தார்.

''......கள் ஏறுகிற சாதி பெட்டையோட திரியிற என்று இஞ்ச ஊரெல்லாம் கதையாக் கிடக்கு எங்களுக்கு வெளியில வெளிக்கிட வெட்கமாயிருக்கு. ஊரெல்லாம் உன்ர கதையாத்தான் கிடக்கு. கலியாணவீடு, குடிபூரல்வீடு, கோயிலடி எல்லாம் சனத்துக்கு இது தான் கதை. நீ அப்படி பிழைவிடமாட்டாய் என்று எங்களுக்குத் தெரியும். அண்டைக்கு ஒரு நாள் குடிச்சுப் போட்டு பக்கத்து வீட்டு முருகையா மெயின் ரோட்டில நிண்டு உதைச் சொல்லிக் கத்திக்கொண்டிருந்தான். அவனை அடிக்கத்தான் மனம் வந்துது; எனக்கு வெட்கமாயிருந்தது. அவன்ர மகளைக் கலியாணம் கேட்டுவந்து நீ செய்யமாட்டாய் என்டு சொன்ன கோபத்தை வச்சுத்தான் அவன் பேசியிருக்கிருன். அப்படி ஏதும் உண்மையாயிருந்தா வீட்டில் நீ அஞ்சு பிணத்தைத்தான் பாப்பை. உடன் பதில்;

—இப்படிக்கு,
உன் அப்பு.

கடிதத்தை வாசித்ததும் எனக்கு வேலை ஓடவில்லை. என் உள்ளத்தில் இருந்த இன்பக் கனவெல்லாம் இடிந்து நொறுங்குவது போல் இருந்தது. பசியே எடுக்கவில்லை. அன்றைய நாள் ஒருவருடமாகக் கழிந்தது. அலுவலகம் முடிந்து வெளியேறினேன். அன்றைய எனது நிலை அவளையும் தடுமாற வைத்திருக்கிறது. விடயத்தை அவளிடம் கூறினேன். அவள் கண்கள் கண்ணீரைச் சொரிந்தன. மூன்று நாட்கள் நான் அலுவலகத்திற்கே போகவில்லை. அந்த மூன்று நாளும் 'அவளடையாத வேதனைகள் இருந்திருக்கவே முடியாது.

மறுநாட்காலை எனது அறைக்கு வந்த நண்பனொருவன் அவள் நஞ்சருந்தி மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டிருக்கும் செய்தியைக் கூறினன். உடனே மருத்துவமனைக்கு ஓடினேன். என்னைக் கண்டதும் அவள் கண்கள் தாரை தாரையாகக் கண்ணீரைச் சொரிந்தன; நான் 'கோ'வென்று அலறியபடி அவளருகே சென்றேன். அவள் தனது அழுகையை அடக்கியபடி 'நீங்கள் நன்ருக மனவேதனை அடைந்திருப்பதும், அதனல் அலுவலகத்திற்கு வரமுடியாதிருப்பதும் என்னைக் கவலைக்குள்ளாக்கிறது. உங்கள் சிந்தனையினல் மனம் நொந்த நான் என்ன செய்வதென்றே தெரியாமல் நஞ்சை அருந்திவிட்டேன். இந்தச்சமுதாயத்தில் சாதிக்கேடு அழித்தொழிக்கப்படும் வரை எங்களைப் போன்ருேரது வாழ்க்கை நரகந்தான். அதைவிட இறப்பதே...மே...ல்! அவளுடைய நா தடுமாறியது. என்னை நோக்கித் தன் கைகளை நீட்டினள்.

'அவளு'டைய கைகளை என் கண்ணீரால் புனிதமாக்கினேன்.

அவள் உயிர் உடலை விட்டுப்பிரிந்தது!

(யாவும் கற்பனை)

# கேட்டதும் அறிந்ததும்

அபிவியக்தன்

## 'சோத்தி'மரத்தின் தமிழ் அறிவு!

தன்னைத் 'தேக்குமரம்' என்று கூறி தனது முதுகில் தானே தட்டிக்கொண்ட 'சோத்தி' மரம் ஒன்று அரசாங்க 'கெசட்'டாக வெளிவரும் நாளேடொன்றின் பின் பக்கத்தில் இரண்டு பந்திகளை நாடோறும் வீணுக்கி வருகிறது—அல்லது அதில் எழுதிப்பழகிவருகிறது, எழுதுவதற்கு ஒன்றும் தலைக்குள் இல்லாத நேரத்தில், தமிழ்த்தலைவர்களைத் தாக்கி—முன்பு பேசப்பட்டு பல தடவை பதிலுளிக்கப்பட்டு தீர்ந்துபோன விஷயங்களை வைத்து—ஏதோ புதிய செய்தியை கூறுவதுபோல அழுது தீர்க்கிறது. இதன் தமிழ் அறிவு எவ்வளவு என்பதை அது அண்மையில் பயன்படுத்தியுள்ள ஒரு சொல் எடுத்துக்காட்டுகிறது. அது இது தான்! — ''யாரிடம் சொல்லி அழுவுவது?

ஃ ஃ ஃ

## "......செக்கென்ன சிவலிங்கம் என்ன?

அண்மையில் வெளிநாடொன்றுக்கு அமைச்சர் ஒருவர் பயணமானபோது, தன்னை வழியனுப்ப கொழும்புக்குவரும்படி தனது கட்சி அமைப்பாளர்கள் என்று கூறப்படும் எடுபிடிகளுக்கு கட்டாய உத்தரவு போட்டிருந்தாராம் குறித்த அமைச்சரின் கோபத்துக்கு ஆளாகக்கூடாதென்று பயந்து கொழும்புக்கு ஓடோடி வந்த எடுபிடிகள் அமைச்சரை விமானத்திலேற்றி அனுப்பிவிட்டு அடுத்த கணம் செய்த வேலையென்ன தெரியுமா? அந்த அமைச்சருக்கு பதிலாக அமைச்சர் பொறுப்பேற்றிருந்த அரையமைச்சருக்கு கால் கழுவி பூப்போட்டு வணங்கியது தான்!

ஆமாம்—நக்கிற நாய்களுக்கு செக்கென்ன சிவலிங்கம் என்ன?

ஃ ஃ ஃ

## பாலா தம்போவின் ஏட்டுச்சுரைக்காய்!

கடந்த ஞாயிற்றுக்கிழமை பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் பேசிய பாலாதம்போ தம்முடைய ஏட்டுச்சுரைக்காயை தமிழ் மக்கள் முன்படைத்தார். வர்க்கப்புரட்சி நடைபெற்று தொழிலாளர் அரசு வந்தபின் தமிழுக்கு அரசுரிமையும், இந்தியவம்சாவளியினர்க்கு குடியுரிமையும் வழங்கப்படும் என்பது அவரது வாதம். ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவாது என்ற பழமொழி தமிழ் மக்களுக்கு மனப்பாடம் என்பதை பாவம் அவர் மறந்து விட்டார்.

இதற்குப் பதிலளித்துப் பேசிய உடுப்பிட்டி சிவா, பாலாதம்போவின் கூற்று — பசிக்கிறது என்று பாண் கேட்பவனுக்கு வானத்திலிருந்து 'கேக்'கிடைக்கும்; அது வரை பொறுத்திரு என்று கூறுவதைப் போன்றதாகும் என்று சூடாகக்கொடுத்தார்.

தமிழ் மக்களின் நிலவுரிமை பற்றியும், சிங்களக்குடியேற்றங்களை தடுத்து நிறுத்துவதுபற்றியும் அங்கு கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பாலாதம்போவின் 'சமாளிப்பு' அங்கிருந்த மக்களுக்கு திருப்தியளிக்கவில்லை!

ஃ ஃ ஃ

## வெளிநாட்டு ஹோட்டலில் இலங்கை அரசியல் வாதியின்படம் . . . !

''வெளிநாட்டிலுள்ள ஹோட்டல் ஒன்றில் தொங்கும் இலங்கை அரசியல் வாதியொருவரின் ஒரு பெரிய உருவப்படம் பற்றி கொழும்பில் ஒரு கதையடிபடுகிறது. இந்தப் படத்தைப் பார்த்த ஒருவர் ஆச்சரியமேலிட்டு இவர் படம் ஏன் இங்கு தொங்குகிறதென்று கேட்டாராம் இது தான் இந்த ஹோட்டலின் புதிய முதலாளி என்று அவருக்கு கூறப்பட்டதாம். இலஞ்சக் கமிஷனரின் வலையில் சிக்காமல் எவ்விதம் வெளிநாட்டுக் கொள்வனவுகள் மூலம் கொழுத்த பணம் சம்பாதிக்க முடியுமென்பதை எடுத்துக்காட்ட இது போதுமானது —''

— இவ்வாறு அரசியல் கட்சியொன்றின் பிரசார ஏட்டில் வெளியிடப்பட்டிருந்த ஒரு செய்தி கூறுகிறது.

ஃ ஃ ஃ

## அடிவயிற்றில் பிறந்த சோசலிசம்!

சோசலிசம் தனது அடிவயிற்றில் பிறந்ததாக கவிஞர் கண்ணதாசன் கூறியிருக்கிறார். ''அந்தக் காலத்தில் நான் சோறு இன்றி இருக்க இடமின்றி கடற்கரையில் படுத்து உறங்கினேன். பொலீஸ்காரர் என்னை வந்து தனது தடியால் தட்டியெழுப்பிவிடுவார். பசியால் துடித்திருக்கிறேன் பல வீடுகளுக்கு வேலை கேட்க சாப்பாட்டு நேரத்தில் பகல் ஒரு மணிக்குப் போவேன். அவர்கள் வேலை இல்லையென்றாலும், ஒருவேளை சோறுவது போடமாட்டார்களா என்று நினைப்பேன் —'' இவ்வாறு கூறியிருக்கிறார் கவிஞர்.

ஃ ஃ ஃ

## மரணத்தை அறிந்த மகாத்மா!

காந்தியடிகள் சுடப்பட்டு இறந்தது ஒரு நாள் மாலை வேளைப் பிரார்த்தனைக் கூட்டத்தின் போது. அன்று காலை காந்தியடிகளைக் காண வந்த பிரபல அமெரிக்க எழுத்தாளரான மார்கரட் பாக்வொயிட் அம்மையார் ''125 ஆண்டுகள் உயிர் வாழ்வேன் என்று கூறிவந்தீர்களே, எந்த நம்பிக்கையில் அம்மாதிரிக் கூறினீர்கள் என்று அவரிடம் கேட்டார். அதற்கு காந்தியடிகள் ''அந்த நம்பிக்கையை தான் இப்போது இழந்துவிட்டேன்'' என்று பதிலளித்தார். அவரது பேச்சில் மரணத்தின் சாயல் படிந்திருந்ததை கவனித்த சர்தார்படேல், பலத்த பாதுகாப்புக்கு உத்தரவிட்ட போது மகாத்மா காந்தி சிரித்தபடி கூறியது என்ன தெரியுமா?

''கடவுளைத்தவிர வேறு எவராலும் என்னைக் காப்பாற்ற முடியாது!''

# கச்சதீவுப் பிரச்சினை பற்றி

## தமிழக சட்டசபையில் நடைபெற்ற

# காரசாரமான விவாதம்!

கச்சைதிவுப் பிரச்சினையையொட்டி தமிழ்நாடு சட்டப்பேரவையில் அண்மையில் நடைபெற்ற சுவையான விவாதம் வருமாறு:—

கோவை செழியன்: முதல் அமைச்சர் அவர்கள் கச்சத்தீவு சம்பந்தமாக மத்திய அரசு எந்தவிதமான முடிவும் எடுக்கவில்லை, தமிழகத்தைக் கலக்கவில்லை என்று சொன்னார்கள். அது வேதனைக்குரிய செய்திதான். ஆனால் அதே நேரத்தில் இலங்கையில் இருக்கிற தமிழர்களை கொடுமைப்படுத்தினார்கள் என்ற செய்தியும் வந்துகொண்டிருக்கிற நேரத்தில் — வெளிநாட்டுப் பிரச்சினையைப்பற்றிப் பேசவில்லை—கச்சத்தீவு தமிழகத்திற்கு சேரவேண்டிய ஒன்று: அதற்காக மத்திய அரசு எந்தவிதமான முயற்சியும் எடுக்கவில்லை.........

பேரவைத்தலைவர்: புதுக் கருத்து சொல்கிறீர்கள்.

கோவை செழியன்: இதற்காக மத்திய அரசை எதிர்த்து நீங்கள் ஏதாவது போராட்டம் நடத்தினீர்களா? அந்த நேரத்தில் இலங்கையிலிருந்து வந்த பிரதம மந்திரிக்கு நீங்கள் மாலை போட்டு வரவேற்பு தந்திருக்கிறீர்கள் முடியாது என்று சொன்னால் மத்திய அரசு கழுத்தை வெட்டிவிடுவார்களா? முடியாது என்று ஏன் சொல்லவில்லை.

பெ. சீனிவான்: நான் கூட அனதத்தான் சொல்ல நினைத்தேன். இலங்கைப் பிரதமர் வந்தார்கள். அந்தப் பிரதம அமைச்சரை வரவேற்க வேண்டியது நம்முடைய முதல் அமைச்சர் கடமை. ஆனாலும், தமிழர்களுடைய எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் வரவேற்க முடியாது, தமிழ் நாட்டின் சார்பில் பொதுமக்கள் கறுப்புக்கொடி காட்டுவார்கள் என்று ஜாடை காட்டியிருந்தால் அன்றைக்கு திருமதி பண்டாரநாயகா அவர்கள் இங்கே இறங்கியிருக்க முடியாது. பிரதமர் அவர்கள் நம்முடைய புண்பட்ட உள்ளத்தை புரிந்துகொண்டிருப்பார்கள் அதைச் செய்திருக்கலாமே?

அனந்தநாயகி: பி.சி. ராய் அவர்கள் தன்னுடைய மாநிலத்தைக் காப்பாற்றுவதற்காக சுப்ரீம் கோர்ட்டுக்குச் சென்ற மாதிரி கச்சத்தீவுப் பிரச்சினை, இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்த அரசு ஏன் நடவடிக்கை எடுத்து இருக்கக் கூடாது. அதை சுப்ரீம் கோர்ட்டின் கவனத்திற்குக் கொண்டுபோவதற்கு நீங்கள் என்ன செய்தீர்கள்?

முதல்வர் கலைஞர்: கச்சத்திவு பிரச்சினையில் இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றால் மாநில சுயாட்சி தேவை. அதுகூட போதாது.

அனந்தநாயகி: மாநில சுயாட்சி இல்லாமல் டாக்டர் பி. சி. ராய் அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறாரே, அதே மாதிரி நீங்கள் ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது?

முதல்வர் கலைஞர்: அவர் நடவடிக்கை எடுக்கின்ற உணர்வோடு கேட்டாரே தவிர, நடவடிக்கை வெற்றி பெறவில்லை. அம்மையார் அவர்கள் முழுவதும் கவனிக்காமல் அரைகுறையாகப் பேசுவது நல்லது அல்ல. இலங்கைப் பிரதமருக்கு நான் வரவேற்பு அளித்தது சரியா என்று கேட்டார்கள். ஒரு நாட்டினுடைய பிரதமர் வருகின்ற நேரத்தில் அவர்களுக்கு மரியாதை காட்டுவது என்பது வேறு, அதே நேரத்தில் நமது உரிமைக்கு குரல் கொடுப்பது என்பது வேறு.

அன்றைக்கே இலங்கையில் நடைபெற்ற பிரச்சினையைக் கண்டித்து, சூழ்நிலைகளை, சம்பவங்களைக் கண்டித்து, நான் அறிக்கை விடுத்திருக்கிறேன்.

இந்தியாவுக்கு வருகின்ற ஒருவரை வரவேற்பது நம்முடைய பண்பாட்டைப் பொறுத்த விஷயம். வராதே போ என்று சொல்கிற உரிமையை நாம் பெற்றிருக்கவில்லை. அதற்காக இலங்கையில் நடைபெற்ற சம்பவத்தை ஆதரித்துவிட்டதாக அர்த்தம் இல்லை.

கச்சத்திவுப் பிரச்சினையில் நாம் டெல்லியோடு போராட வேண்டுமே தவிர, இலங்கையோடு போராட என்ன சக்தி நமக்கு இருக்கிறது. என்ன உரிமை நமக்கு இருக்கிறது. என்ன அதிகாரம் நமக்கு இருக்கிறது.

'கச்சத்திவுப் பற்றி இன்னும் ஒரு முடிவுக்கு வந்துவிடவில்லை. இன்னும் நம்மைக் கலக்கவில்லை. இன்றைக்கு இதைப்பற்றி இங்கே பேசியிருப்பது நம்மை கலந்து பேசுவதற்கு ஒருவேளை அவர்களுடைய மனதில் அந்த எண்ணத்தை உருவாக்கும் என்று கருதுகிறேன்.

நம்மையும் மீறி கச்சத்திவை விட்டுவிட ஒரு முடிவு எடுப்பார்களேயானால் அந்த நேரத்தில் நீங்கள் போராடுவீர்களா என்று என்னைப் பார்த்து அண்ணா தி. மு. க. நண்பர் கேட்பதைவிட, நாம் அனைவரும் சேர்ந்து போராடுவோம் வாருங்கள் என்று விடுக்கின்ற அழைப்பை ஏற்க வேண்டும்.

கோவை செழியன்: அப்படி ஒரு போராட்டம் முதல்வர் நடத்தினால் அவரோடு சேர்ந்து போராட நாங்கள் தயார்!

முதல்வர் கலைஞர்: அப்படி வாருங்கள்! இதே உணர்வு மாநில சுயாட்சி பிரச்சினையிலும் இருக்க வேண்டும். அதிகாரங்களைக் கொடுங்கள், ஆனால் கருணாநிதியிடம் கொடுக்காதீர்கள், நாவலரிடம் கொடுக்காதீர்கள், பேராசிரியரிடம் கொடுக்காதீர்கள், மற்றவர்கள் கையில் கொடுக்காதீர்கள் என்ற குறுகிய நோக்கத்தை கொஞ்சம் விட்டுவிட்டு 'கூட்டுக்கு வெளியே வா' கிளியே!

## குடியரசு...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றுவது கிடைத்துவிடவில்லை. மாறாக தமிழ் மக்களது உரிமைகள் மேலும் மறுக்கப்பட்டு, தமிழ் மக்கள் அடக்கப்பட்டுள்ளனர்.

தங்கள் மொழி, கலாசாரம் சம்பந்தப்பட்ட உலகத் தமிழ் மாநாட்டை, தாம் விரும்பிய இடத்தில் — தங்கள் சொந்த மண்ணில் — நடத்தும் உரிமை கூட அவர்களுக்கு மறுக்கப்பட்டது. அரசின் விருப்பத்துக்கு மாறாக, அந்த மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்தி முடித்த காரணத்தினால் அவர்கள் பழிவாங்கப்பட்டனர்.

சனவரி 10ம் திகதி யாழ்ப்பாணத்தில் உலகத் தமிழ் மாநாட்டின் இறுதி நாளன்று தமிழ் மக்கள் மீது நடைபெற்ற பொலிசாரின் திட்டமிடப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதலும், பலர் உயிரிழந்ததும், தமிழ்ப் பெண்கள் தங்கள் மானத்தைக் காத்திட அன்றுபட்ட அவதியும் சிங்கள அரசாங்கம் தமிழ் மக்களை இந்நாட்டில் எவ்வாறு நடத்துகிறது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். அன்று நடந்த இக்கொடுமையை பல தலைமுறைகளுக்கு தமிழர்களால் மறக்க முடியாது. இது சம்பந்தமாக ஒரு பகிரங்க நீதி விசாரணையைக்கூட நடத்த முடியாது என்று அரசு கைவிரித்துவிட்டது.

இந்நிலையில் எதிர்வரும் குடியரசு நாளான் மே 22ல் தமிழ் மக்கள் கொண்டாடவோ குதூகலிக்கவோ எதுவித காரணமுமில்லை.

எனவே மே 22ல் அரசாங்கமும், அரசாங்க ஆதரவாளர்களும் நடத்தும் எதுவித விழாக்களிலும், கொண்டாட்டங்களிலும் தமிழ் மக்கள் கலந்துகொள்ளாது அவற்றைப் பகிஷ்கரிக்க வேண்டும். அன்றைய தினத்தில் தமிழ் இனத்தின் உரிமைகளுக்கும் சுதந்திரத்துக்கும் தொடர்ந்து போராட உறுதி பூண வேண்டும்.

தமிழர் கூட்டணி யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார், வவுனியா, திருகோணமலை ஆகிய ஐந்து தமிழ்த் தலைநகர்களிலும் புதிய அரசியல் சட்டத்தைக் கண்டித்து பொதுக்கூட்டங்களை நடத்தவிருக்கிறது. அக்கூட்டங்களில் தமிழ் மக்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு, புதிய அரசியல் சட்டத்துக்கு தமது எதிர்ப்பைத் தெரிவிக்கவேண்டும்.

— இவ்வாறு திரு. அமிர்தலிங்கம் தனது வேண்டுகோளில் தெரிவித்திருக்கிறார்.

''செல்வம் பயன்படுவது நம்மிடம் இருக்கும் பொழுதல்ல, நம்மைவிட்டுச் செல்லும்பொழுதே அது பயன்படுகிறது.''

சுவாமி சித்பவானந்தர்.

15 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளை அனுப்பி வேம்பு என்ற புத்தகத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**மில்க் வைற் சவர்க்காரத் தொழிலகம்,**

**த. பெ. எண். 77, யாழ்ப்பாணம்.**

சுயமரியாதையுடன் இணைந்து வாழ முடியாவிடின்

# பிரிந்து வாழ்வோம்!



## புதிய அரசியல் சட்டத்தை தமிழினம் நிராகரித்துவிட்டது!

### சர்வகட்சிக் கருத்தரங்கில் அமிர், சிவா, உரிமை முழக்கம்!

"ஒரே இலங்கையில்—பிளவுபடாத இலங்கையில் நாம் வாழ்வதாக இருந்தால் சிங்கள மக்களுடன் சம உரிமையும் சம வாய்ப்பும் உள்ளவர்களாக—யாராலும் ஆளப்படாதவர்களாக—நம்மை நாமே ஆளுவோராக — சுயமரியாதையுள்ளவர்களாகவே வாழுவோம்! அதற்கு சாத்தியமில்லாத நிலையில்—சிங்கள மக்களிடமிருந்து தனியே பிரிந்து சென்று—ஆனால் சிங்கள மக்களுடன் நண்பர்களாகவே வாழவே விரும்புகிறோம்!"

—இவ்வாறு கொழும்பில் நடைபெற்ற சர்வகட்சிக் கருத்தரங்கொன்றில் கலந்துகொண்டு பேசிய தமிழர் கூட்டணித் தலைவர்களான நாவலர் அமிர்தலிங்கமும், உடுப்பிட்டி சிவாவும் முழக்கமிட்டனர்!

கொழும்பு ஆய்வுக்கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இக்கருத்தரங்கு 12-5-74 ஞாயிற்றுக்கிழமை மாலை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது. கருத்தரங்குக்கு சட்டத்தரணி திரு. பி. விமலச் சந்திரன் தலைமை தாங்கினார்.

'இன்றைய இலங்கை' எனும் தலைப்பில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் அரசாங்கத்திலுள்ள கட்சிகளின் சார்பில் கலந்துகொண்டு உரையாற்றுவதற்கு அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா ஒப்புதல் அளித்திருந்தபோதிலும் கடைசி நேரத்தில் அவர் கூட்டத்திற்கு வருகைதராது வெற்றிகரமாகப் பின்வாங்கிக் கொண்டார்.

#### அத்துலத் முதலி

ஐ. தே. கட்சியின் சார்பில் உரையாற்றிய சட்டத்தரணி திரு. லலித் அத்துலத் முதலி பேசுகையில் கூறியதாவது:-

'இன்று இந்நாட்டிலுள்ள பிரச்சினை பொருளாதாரப் பிரச்சினையல்ல; அரசியல் பிரச்சினையே யாகும்; 1970ம் ஆண்டு முதல் இந்த அரசாங்கம் பின்பற்றிவரும் கொள்கைகளினுலேதான் இன்றைய நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இன்று இவர்கள் சொல்வதை 1970ம் ஆண்டுத்தேர்தல் நேரத்தில் சொல்லவில்லை. இன்று சொல்வதற்கு நேர் முரணுகவே நாலைக்கு கூறுவார்கள்.

'இந்த அரசாங்கத்தின் முற்போக்குத் திட்டத்தால் பாதிக்கப்பட்டவர்கள் தான் இந்த அரசாங்கத்துக்கு எதிராக குரல் எழுப்புவதாக கூறுகிறார்கள். ஆனால் அவர்கள் கூறும் முற்போக்கு நடவடிக்கைகளினால்—அதாவது நிலச்சீர் திருத்தத்தினால் 5551பேர்களும், வீட்டுஉச்சவரம்பினால் 9000 பேரும், வருமான உச்சவரம்பினால் 11,000 பேரும் — ஆக 25,000 பேர்களே பாதிக்கப்பட்டுள்ளனர். உண்மையில் இந்த 25,000 பேர்களும் தானு இன்று அரசாங்கத்தை எதிர்க்கின்றனர். அப்படியானல் 25,000 பேருக்காகவா இவ்வளவு பயப்படுகிறீர்கள்?

'இந்த அரசு பதவிக்கு வந்தது ஓர் அரசியல் விபத்தாகும். ஏனெனில் ஆக 49வீதமான வாக்காளர்களின் ஆதரவைப்பெற்ற அரசு மூன்றில் இரண்டுபங்கு பெரும்பான்மை பலத்துடன் விளங்குகிறது. 1977ம் ஆண்டு வரை ஆட்சியிலிருக்க அரசுக்கு அதிகாரமில்லை —1975ம் ஆண்டுவரை ஆள்வதற்கே அதற்கு உரிமையுண்டு. ஒரு பொது ஜனவாக்கெடுப்பு நடத்தி, அதில் உங்களை 77ம் ஆண்டு வரை ஆட்சி நடத்த வாக்காளர்களில் 45 சத விதமானோர் அனுமதித்தால்கூட நாங்கள் அதை மனப்பூர்வமாக ஏற்கிறோம். இதற்கு அரசு சம்மதமா?

#### நாவலர் முழக்கம்

தமிழர் கூட்டணி செயலாளர் நாயகமும் தமிழரசுக் கட்சித் தலைவருமான நாவலர் அ. அமிர்தலிங்கம் பேசும் பேசும் போது கூறியதாவது:-

'இன்று நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருப்பது உண்மை. ஆனால் இந்த நெருக்கடி ஏற்பட்டதற்கு அடிப்படைக் காரணம், 1948ம் ஆண்டிலிருந்து மாறி மாறிப் பதவிக்கு வந்த சிங்கள அரசாங்கங்கள், சிறுபான்மை மக்களின் அரசியல் உரிமைகளை பகடைக்காயாக வைத்து அரசியல் நடத்தி வந்திருப்பது தான்! சம உரிமைகளும், சமவாய்ப்புக்களும் மறுக்கப்பட்டு வருவதன் காரணமாக தமிழினம் குமுறிக் கொந்தளித்து எரிமலையாகிக் கொண்டிருக்கிறது. சிறுபான்மை மக்கள் விரக்தியும் வேதனையும் அடைந்திருக்கும் ஒரு நாட்டில் எப்படி பொருளாதாரம் வளரமுடியும்?

'தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளை பறித்து —தமிழர்களின் உரிமைப் பிரச்சினைகளை பகடைக்காயாக வைத்து—என்றென்றும் அதிகாரத்திலிருக்கலாமென்று கருதி தமிழர்களுக்கு எதிராக செயற்பட்டு வந்த இரண்டு சிங்களக் கட்சிகளும் இன்று ஒன்றையொன்று சங்காரம் செய்வதில் மும்முரமாக ஈடுபட்டிருக்கின்றன. தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளைப்பறித்த—அல்லது பறிப்பதற்கு உடந்தையாக இருந்த சிங்களக் கட்சிகள் இன்று தமக்கும் அதே ஆபத்து நேரும் போதுதான் 'ஜனநாயகம்' பற்றி பதறித் துடிக்கின்றன. 'வாழ்வினை உருத்து வந்தூட்டும்' என்ற தமிழ் முதுமொழியையே இது நினைவூட்டுகிறது!

#### குடியுரிமைச் சட்டம்

இன்றைக்கு ஜனநாயகத்தைப் பற்றி பெரிதாகப் பேசுபவர்கள் —ஜனநாயகத்துக்கு ஆபத்து என்று கூச்சல் போடுபவர்கள் — எவராவது தமிழினத்தின் ஜனநாயக உரிமைகள் பறிக்கப்பட்ட



போது அதுபற்றி மூச்சும் விட்டதில்லை. ஜனநாயகத்தைக் காப்பாற்ற இன்று தென்னிலங்கையில் புறப்பட்டுள்ள அதே சக்திகளே தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளைக் குழிதோண்டிப் புதைத்தன.

1948ம் ஆண்டு அநியாயமான குடியுரிமைச் சட்டங்கள் கொண்டுவரப்பட்டு, 10 இலட்சம் மலையகத் தமிழர்கள் அரசியல் அனதைகளாக்கப்பட்டனர். அன்றே ஜனநாயகம் இந்நாட்டில் படுகொலை செய்யப்பட்டு விட்டது: 1947ம் ஆண்டு பொதுத்தேர்தலில் 8 பிரதிநிதிகளை தெரிவு செய்யும் உரிமை படைத்திருந்த மலையகத் தமிழர்கள் 1952 பொதுத்தேர்தலில் ஒரு பிரதிநிதியைக்கூட தெரிவு செய்யமுடியாதவாறு தடுக்கப்பட்டனர்: அந்தத் தொகுதிகளில் எல்லாம் சிங்களப் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டனர்; தொகுதி பிரிப்பதற்கு — அவர்கள் வெறும் எண்ணிக்கைக்கு மட்டும் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். மலைநாட்டுத் தமிழர்களுக்கு எதிராக அன்று இவ்வாறு செய்யப்பட்ட அநீதியால் இன்றைக்கு நாமும் பாதிக்கப்படுவதை பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒரு பகுதியினர் உணருகின்றனர்;

"அன்று, இடதுசாரிக்கட்சிகளின் தலைவர்கள் பாராளுமன்றத்துக்குள் குழப்பங்கள் புரிந்தபோது அவர்களுக்கெதிராக இரவு இரவாக யூ.என்.பி. 'கெசட்' மூலம் சட்டங்களை கொண்டு வந்த அதே பாணியில், இன்று இடதுசாரிகளும் ஆட்சியிலிருந்து கொண்டு இரவோடிரவாக 'கெசட்' சட்டங்களை திடுதிடென்று போடுகிறார்கள்!

#### சிங்களம் மட்டும்

"1956ம் ஆண்டுகொண்டுவரப்பட்ட சிங்களம் மட்டும் சட்டம், தமிழ்மொழியின் உரிமையைப் பறித்தது மட்டுமன்றி — தமிழ் மக்கவின் மனித கௌரவத்துக்கும் விடப்பட்ட ஒருசவாலாகும். தமிழன், உத்தியோகத்தில் நிலைத்திருக்கவேண்டுமென்றால், சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டும்—பதவி உயர்வு வேண்டுமென்றாலும் சிங்களம் வேண்டும்; ஆனால் சிங்களவனுக்கு தன் தாய்மொழியான சிங்கள மொழி மூலம் வேலைக்கு சேர்ந்தால், அதற்குமேல் பதவி உயர்வுக்கோ, சம்பள உயர்வுக்கோ இன்னோர் மொழியைப் படிக்கவேண்டிய கட்டாயம் இல்லை தமிழனுக்கு எதிராகமட்டுமே இந்தகைய பாரபட்சம்!

#### வாழும் உரிமையும் இல்லை

"தமிழ் பிரதேசங்கள் திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றத்தினால் பறிக்கப்பட்டன. 1958ம் ஆண்டு இனக்கலவரத்தை இன்று தென்னிலங்கையில் அதிகாரத்துக்காகப் போட்டிபோடும் இரண்டு கட்சிகளுமே முன்னின்று நடத்தின: தமிழ் மக்கள் இந்நாட்டில் தாம் விரும்பிய இடத்தில் வாழும் அடிப்படை உரிமையைக்கூட இந்நாட்டுத் தமிழனுக்கு வழங்கவிருப்பமில்லாது இரண்டு சிங்களக் கட்சிகளுமே தமிழனை அடித்து உதைத்து, சொத்துக்களைப் பறித்து கப்பலேற்றி அகதி

(9-ம் பக்கம் பார்க்க)

### மனிதர்கள்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

தான் —எப்படித்தான் இருந்தாலும் தன் பெண்மையையே எனக்குக்கொடுத்த உத்தமி அவள். அவள்சொன்னதை நான்தான் நம்பவில்லை என்றெல்லாம் வசந்தியை மனதிற்குள் வாழ்த்தினர். வசந்தி நின்ற இடத்திற்கு திரும்பி நடந்தார்.

அங்கே...?

வசந்தியைக் காணவில்லை. அந்த வசந்தி கொஞ்சநேரத்திற்கு முன்பே ஒரு வாலிபனுடன் ஓடிப்போய் விட்ட செய்தியை ஒருவன் சொன்னன்.

ஏமாற்றத்தின் எல்லையில் நின்ற இராமநாதரின் விழிகள் கடலை நோக்கின. உன்னோடு உன்னோடு என்று கூவிக்கொண்டு மணற்பரப்பைத்தேடி ஓடிவரும் அலைகள் அதை ஏமாற்றிவிட்டு மீண்டும் கடலோடு கலந்து விடுவதைப்போல் பல மனிதர்கள் சில மனிதர்களை ஏமாற்றிப் பணம் பறிக்கும் சமுதாயச் சீர்கேட்டிற்கு தானும் பயன் பட்டு விட்டதை இரையாகி உணர்ந்தார்.

கடலைப் பார்த்துக் கற்பனை செய்த கவிஞர் 'வாலி'யின் இனிமைப் பாடலில் இரண்டு அடிகள் மாத்திரம் அவர் ஞாபகத்திற்கு வந்தன.

'நேற்று வந்து இன்றிருந்து நாளைபோகும் இங்கே நடந்ததெல்லாம் கடந்து போன நாடகமாகும்'

(யாவும் கற்பனை)

### கிறெட்சர்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

போக்குவரத்தை தடை செய்ததாக ஒரு சாட்டை முன்வைத்து — மிருகத்தனமான முறையில் அன்று தாக்குதல் நடத்தியிருக்கிறார்கள்;

ஒரு கலை, கலாசார விழா வைக்கூட பயமின்றி, சுதந்திரமாக தங்கள் விருப்பப்படி, எண்ணப்படி கொண்டாட முடியாதவாறு, தமிழ் மக்கள் இந்த அரசாங்கத்தினால் கொடுமைப்படுத்தப் படுகிறார்கள்.

சனவரி 10ம் திகதி நடைபெற்ற சம்பவங்களையொட்டி ஓர் நீதி விசாரணை நடத்தப்பட்டு, குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டுமென பிரதமரிடம் கோரியிருந்தோம். அது சம்பந்தமாக அவர் எதுவித நடவடிக்கையும் எடுக்காதது மட்டுமல்ல—பாதிக்கப்பட்ட தமிழர்களுக்காக நேரடியாக ஓர் அனுதாபவார்த்தை கூறக்கூடமுன்வரவில்லை என்பதையும் வருத்தத்துடன் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்—

#### கிறெட்சர் குழு

இதன்பின்னர், யாழ்ப்பாணப் பிரஜைகள் பலர் ஒன்றுகூடி—சனவரி 10 சம்பவங்களையிட்டு விசாரணை நடத்துவதற்கு தாங்களாக ஓர் ஆணைக்குழுவை நியமித்தனர். சகலவிதத்திலும் தகுதியும் ஆற்றலுமிக்கவர்களுமான மூவர் இதில் கடமையாற்றினர். முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர்கள் திருவாளர்கள் ஓ. எல். டி. கிறெட்சர், வி. மாணிக்கவாசகர் ஆகியோருடன், கலாநிதி குலேந்திரனும் ஆணையாளர்களாக பணியாற்றினர். இக்குழுவின் தலைவராக திரு. கிறெட்சர் இருந்தார்.

"இந்த ஆணைக்குழுவினர் யாழ்ப்பாணத்தில் பல தடவைகள் கூடி, ஏராளமான சாட்சியங்களை விசாரித்து அதன்பின்னர், தனது தீர்ப்பை வழங்கியிருக்கின்றனர். பொலிசாரின் அத்துமீறிய நடவடிக்கையை அவர்கள் வன்மையுடன் கண்டித்து, பொலிசாரே குற்றம்புரிந்திருப்பதாக கூறியிருக்கின்றனர்.

அந்த அறிக்கையைஇச்சபையில் சமர்ப்பிப்பதுடன் பிரதமரிடமும் கையளிக்கிறேன். பிரதமர் இதைப் படித்துப் பார்ப்பாரானல், தமிழ் மக்களுக்கு அன்று எவ்வளவு பெரியகொடுமை இழைக்கப்பட்டிருப்பதென்பதை புரிந்துகொள்வாரென்று நினைக்கிறேன். கிறெட்சர் ஆணைக்குழுவின் தீர்ப்பை அடிப்படையாகவைத்து, பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்க பிரதமர் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்."

# யாழில் எழுந்த தமிழோசை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் புதியதொரு மறுமலர்ச்சியும் விழிப்புணர்ச்சியும் ஏற்பட்டதுண்மை. அது ஒரு எதிர்மறையான அல்லது பிரதிபலிப்பான (Negative or Reflective) மறுமலர்ச்சியும், விழிப்புணர்ச்சியுமாகும். 1956ம் ஆண்டின் பின்னரே இந்த தமிழ்மொழிக்கு அரசியல் அந்தஸ்து மறுக்கப்பட்டது. தமிழ் எங்கே அழிக்கப்பட்டுவிடுமோ, கருவறுக்கப்பட்டுவிடுமோ மொழிக்கு எங்கே ஆபத்து வந்துவிடுமோ என்ற அச்ச உணர்வினால் தமிழின் வாழ்வுக்கும் வளத்துக்குமென இனவுணர்ச்சி இலக்கியங்கள், எழுச்சிக் கவிதைகள், தமிழ் மறுமலர்ச்சி இலக்கியங்கள் தோன்றின. ''ஆண்ட பரம்பரை மீண்டும் ஒருமுறை ஆள நினைப்பதில் என்ன குறை?'' என்ற காசி ஆனந்தன் போன்றோரின் உணர்ச்சிக் கவிதைகள் பிறந்தன. இதன் பிரதிபலிப்பாகவே தென்னகத்தில் ''சிங்களம் சேர் தென்னாட்டு மக்கள் திராவிடர் என்று ஊதூது சங்கே!'' என்ற புரட்சிக்கவிஞரின் பாடலும் எழுந்தது!

இவ்வாறு கூறிய திரு. கரிகாலன், இலங்கைத் தமிழ் இலக்கியங்களுக்கு தனித்துவம் வேண்டுமென்ற தில்லைநாதனின் கருத்தை பின்வருமாறு காட்டமாக மறுத்துரைத்தார்:-

''ஈழத் தமிழ் இலக்கியங்களுக்கென்று தனித்துவம் எதுவும் கிடையாது அது தேவையுமில்லை. அப்படித் தனித்துவம் வேண்டுமென்று கோருவது எமது இலக்கிய வளர்ச்சிக்கு ஆபத்தானதும் கூட. மொழி, கலாசார, பிணைப்பினால் நாம் தமிழகத்தை அடியொற்றியே செல்ல வேண்டும். இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து, கனடா போன்ற ஆங்கிலக் குடும்ப நாடுகளில்—அவை போதிய அரசியல் பாதுகாப்புள்ள நாடுகளாக இருந்தும் கூட ஆங்கிலமொழியின் தாயகம் இங்கிலாந்து என்பதால் ஏனைய நாடுகள் இங்கிலாந்தை அடியொற்றியே தமது இலக்கிய மரபுகளை வளர்த்துக்கொள்ளுகின்றன அமெரிக்கா மட்டுமே இதற்கு விதிவிலக்கு. காரணம் அமெரிக்காவுக்கு கலாசார மரபுஎதுவும் கிடையாது அதற்காக அமெரிக்கா கவலைப்படுவதுமில்லை. அதன் வாழ்க்கை முறையே வேறு;

அரசியல் பாதுகாப்புள்ள ஏனைய ஆங்கிலக் குடும்ப நாடுகளே இங்கிலாந்தை அடியொற்றி தமது இலக்கியத்தை வளர்க்கும்போது—அரசியல் பாதுகாப்பற்ற நாம் தமிழகத்தை விட்டு திசை திருப்புவது தற்கொலைக்கு ஒப்பானதாகும். எனவே தமிழகத்தை அடியொற்றியே நாம் இலக்கியம் வளர்க்கவேண்டும்!''

இவ்வாறு அடித்துக் கூறி முடித்தார் திரு. கரிகாலன். திரு. கரிகாலனின் இந்த வாதங்களுக்கு திரு. தில்லைநாதனால் நேரடியான சரியான பதில் அளிக்க முடியவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

றிம்மர் மண்டபத்தில், திரு. தில்லைநாதன் படித்த ஆங்கிலக் கட்டுரையில், இந்தியத் தமிழக இலக்கியங்களுடன் ஈழத் தமிழ் இலக்கியங்களை அடிக்கடி ஒப்பிட்டுக் காட்டி இந்திய தமிழகத்தை விட ஈழத் தமிழகம் இலக்கியத் துறையில் முன்னணிவகிப்பதாக அனுவசியமாக தற்பெருமை பேசி, தமிழகத்து அறிஞர்களை வம்புக்கிழுத்தார். இக் கருத்தரங்குக்கு டாக்டர் சாலை இளந்திரையன் தலைமை வகித்திருந்தது குறிப்பிடத்தக்கது

றிம்மர் மண்டப ஆங்கிலக் கருத்தரங்கிலும் தில்லைநாதன் கட்டுரை பற்றிக் குறிப்புரை கூற வந்த திரு. கரிகாலன் முன்னர் தாம் கூறிய அதே கருத்துக்களையே மீண்டும் வலியுறுத்தினார்.

''திரு. தில்லைநாதன் தமது கட்டுரையின் தலைப்புக்கு முரணாக, தமிழ் நாட்டு இலக்கியங்களை வம்புக்கிழுத்து அடிக்கடி ஒப்பிட்டும் பார்த்துக் கொண்டதால், ஒரு வேளை கட்டுரையின் தலைப்பு ''இரு நாட்டு இலக்கியங்களினதும் ஒப்பீட்டு ஆராய்ச்சி'' (Comparative Stndy) யாக இருக்குமோ என்று கட்டுரைத் தலைப்பை மீண்டும் ஒரு தடவை பார்த்துக்கொண்டேன்''

என்று திரு. கரிகாலன் அங்கு கூறியபோது சபையினரும் தலைமை வகித்த சாலை இளந்திரையனும் அக்கருத்தை ஆமோதித்தனர்.

''திரு. தில்லைநாதனின் கட்டுரை, ஈழத்து தமிழ் இலக்கியம் பற்றி தம்மவரிடையேயுள்ள தாழ்வு மனப்பான்மையையே பிரதிபலிக்கிறது. ஒன்றை உயர்த்துவதற்காக இன்னொன்றைத் தாழ்த்தவேண்டியதில்லை (He suffers from a complex and that is inferiority complex)''

இவ்வாறு திரு. கரிகாலன் ஒரே போடாகப் போட்ட போது சபையினர் அதை ஆர்வமுடன் வரவேற்றனர்.

தில்லைநாதன் கட்டுரை பற்றி அடுத்துக் கருத்துத் தெரிவிக்கவந்த டெல்லிப் பேராசிரியர் ரவீந்திர குமார் சேத்- ''சுதந்திரம் என்றால் எதையும் எழுதவும் பேசவும் வாசிக்கவும் உரிமையிருப்பதே சுதந்திரம். அது இலங்கையில் இல்லை. பறிக்கப்படுகிறது. இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களின் படைப்புக்களை இந்தியப் பத்திரிகைகள் வெளியிடாவிட்டால், அதில் இலங்கை எழுத்தாளர்களுக்கு கௌரவக் குறைவு ஏதும் இல்லை. அதைப் புத்தகமாகப்போடலாம்; அல்லது ''ரோனியோ'' பண்ணி பரப்பலாம்.-எப்படியும் கருத்துக்கள் மக்களுக்கு செல்லவேண்டும், அதுவே எழுத்தாளனின் இலட்சியமாக இருக்கவேண்டும்''- என்று குறிப்பிட்டார்.

திரு. தில்லை நாதனுக்கு சார்பாக கருத்தரங்கில பேசவந்து கட்சி அரசியல் பேசுவதற்கு கலாபரமேஸ்வரன் என்பவர் எத்தனித்தபோது, தலைமை வகித்த டாக்டர் சாலை இளந்திரையன் அதற்கு கிஞ்சிற்றும் இடந்தராது, உறுதியுடன் கண்ணியம் கட்டுப்பாட்டைக் காப்பாற்றி சபையினரின் ஏகோபித்த பாராட்டுதலைப்பெற்றார்.

ஆங்கிலத்தில் கட்டுரையை படித்த திரு. தில்லைநாதன் அதையொட்டி ஆங்கிலத்தில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு ஆங்கிலத்தில் பதில் சொல்லாது, தமிழிலேயே பேசினார். தமிழிலே பேசியது தவறு அல்ல- ஆங்கிலத்திலேயே தனது பதில் வாதங்களை நிறுவ முடியாதவர் ஆராய்ச்சிக் கட்டுரையை மட்டும் ஏன் ஆங்கிலத்திலே படிக்கவேண்டும், தமிழிலேயே அதையும் படித்திருக்கலாமே என்று சபையிலிருந்த சிலர் பேசிக்கொண்டனர்.

(ஆனால் ஒரே கட்டுரையை தமிழில் இரண்டு தடவைகள் எப்படிப் படிப்பது! அதனால் தான் ஆங்கிலத்தை அவர் தேர்ந்தெடுத்துக்கொண்டார் போலும்!)

திரு. தில்லைநாதன் அவர்களாலும் அங்கு எழுப்பப்பட்ட வாதங்களுக்கு நேரடியாகப் பதில் அளிக்கமுடியவில்லை. ''இந்தியாவுக்கு போய், ''ஈழத்து நாவலர்'' பட்டத்தை சுமந்துகொண்டு வந்தவர்கள்'' அப்படி இப்படியென்று அனுவசியமான பிரச்சினைகளையெல்லாம் தொட்டுவிட்டு மேடையை விட்டுச் சென்றார்.

இறுதியாக டாக்டர்சாலை இளந்திரையன் தம்முடைய தீர்ப்பில் பின்வருமாறு ஆணித்தரமாக கூறினார்.

''இங்கு கரிகாலன் எழுப்பிய கருத்து மிகவும் சரியானது. ஈழத்து இலக்கியவளர்ச்சி பற்றிக் குறிப்பிடும்போது இந்திய நாட்டு தமிழ் இலக்கியம் பற்றிக் குறிப்பிடவேண்டியதில்லை. பகீரதன் போன்றவர்களை வைத்து ஆராய்ச்சி செய்யவேண்டியதுமில்லை. ஒரு பகீரதன் கருத்து தென்னகத்தார் முழுவரதும் கருத்தாகாது நான் இந்திய நாட்டைச் சேர்ந்தவன் தான். ஆனால் ஈழத்து மகாகவியின் கவிதை பற்றி ஆராய்ச்சிக்கட்டுரை எழுதியிருக்கிறேன். இது ஏதோ மகாகவியின் மீது கொண்ட தனிப்பட்ட அனுதாபத்தினால் அல்ல; ஈழத்து இலக்கியத்துறையில் எனக்கிருக்கும் உரிமையால்! மகாகவியின் கவிதைகள் உயர்ந்தவை என்று நான் கூறுகின்றேன் என்றால் அதன் பொருள் சாலை இளந்திரையனின் கவிதை குறைந்தது என்பதல்ல! திறமைகளைக் கண்ட போது பாராட்டுகிறவனே உண்மைக் கவிஞன்; நான் மகாகவியைப் பாராட்டுகிறேன் என்றால் அதன் பொருள் நான் குறைந்தவன் என்பதல்ல! ஈழத்து இலக்கியகாரர்கள் சிலரிடையே கரிகாலன் குறிப்பிட்டதுபோல தாழ்வு மனப்பான்மை இல்லாவிட்டாலும் அதன் சாயல் இருக்கிறது. இது அடியோடு நீக்கவேண்டும்''

---

# சுயமரியாதையுடன் இணைந்து வாழ....

(8ம் பக்கத் தொடர்ச்சி)

களாக்கி வடக்கே அனுதைகளாக அனுப்பிவைத்தன.

## புதிய சட்டம்

''இந்நிலையில், 1972ம் ஆண்டு கொண்டுவந்து நிறைவேற்றப்பட்ட புதிய அரசியல் சட்டத்தில் தமிழ் மக்களுக்கு பாரபட்சம் காட்டி வரும் சிங்களம் மட்டும் சட்டம், பிரஜாவுரிமைச் சட்டங்கள் அனைத்தும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இன்றி திருத்தமுடியாதவாறு நிரந்தரச் சட்டங்களாக்கப்பட்டுவிட்டன; ஏனைய மதங்களுக்கு இல்லாதவாறு பௌத்த மதத்துக்கு அரசாங்க மதம் எனும் அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. தமிழ் மக்கள் என்றென்றும் ஆளப்படும் வர்க்கம் — சிங்கள மக்கள் இந்நாட்டின் நிரந்தர ஆளும் வர்க்கம் எனும் நிலையை புதிய அரசியலமைப்பு ஏற்படுத்தியிருக்கிறது. இந்த அரசியலமைப்பை ஏற்பதில்லையென்று தமிழினம் திட்டவட்டமாக அறிவித்துவிட்டது!

## காரணம் என்ன?

''சனவரி 10ம் திகதி உலகத்தமிழ் மாநாட்டின் போது யாழ்ப்பாணத்தில் வெளிநாட்டு அறிஞர்களை காண்பதற்கும், அவர்களது பேச்சுக்களை கேட்பதற்கும் அமைதியாக கூடியிருந்த ஐம்பதினாயிரத்துக்கு மேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்கள் மீது வீறியத்தடை செய்தார்கள் என்ற சாட்டுடன் மிருகவெறித்தாக்குதல் நடத்திய பொலிசார் கொழும்பில் வாசிட்டி பிலேஸில் உள்ள எதிர்க்கட்சித்தலைவரின் இல்லத்தை முற்றுகையிட்டு தெருக்களை தடை செய்து, பஸ்களுக்கும் அரசாங்க வாகனங்களுக்கு சேதம் ஏற்படுத்தி, ஜே. ஆரை கைதுசெய்வதற்கு விடமாட்டோம் என்று பொலிசாருக்கும் அரசுக்கும் சவால் விடுத்து ஒரு கும்பல் ஆர்ப்பாட்டம் செய்தபோது — அவர்களுக்கு எதிராக கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசவோ தடியடி நடத்தவோ இல்லை—

''இதற்குக் காரணம் என்ன? யாழ்ப்பாணத்தில் கூடியவர்கள் — தமிழர்கள்; ஆளப்படும் இனத்தினர்; கொழும்பில் வாட்பிளேஸில் கூடியவர்கள், எதிர்க்கட்சியினராக இருந்தாலும், சிங்களவர்கள், ஆளும் இனத்தவர்கள்! இதுதானே காரணம்! இவ்வாறு பொலிஸ் நடவடிக்கைகளில் கூட பாரபட்சம் காட்டப்படுகிறது.

''இன்றைய தமிழ் இளைஞர்கள் பின்வரும் ஒரேயொரு முழக்கத்தைத்தான் எழுப்புகிறார்கள். ஒரே இலங்கையில் நாம் வாழ்வதாக இருந்தால் சம உரிமையுள்ளவர்களாக— யாராலும் ஆளப்படாதவர்களாக—நம்மை நாமே ஆளுவோராக — சுயமரியாதையுள்ளவர்களாகவே வாழுவோம்! அதற்கு சாத்தியமில்லாத நிலையில் சிங்கள மக்களிடமிருந்து பிரிந்துசென்று—ஆனால்நண்பர்களாகவே — வாழ விரும்புகிறோம்!

## பாலா தம்பு

திரு பாலாதம்பு பேசுகையில்:- யூ. என். பி. யும் சரி, இன்றைய ஐக்கிய முன்னணி அரசும் சரி முதலாளித்துவ பிற்போக்கு அரசுதான். என். எம். பெரேராவும், பீட்டர் கெனமனும் ஏனையோரும் மக்களைக் காட்டிக் கொடுத்துவிட்டார்கள். இன்றைய முதலாளித்துவ முறை தகர்க்கப்பட்டு, ஓர் உண்மையான தொழிலாளர் அரசை நிறுவினால் மட்டுமே தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கும் ஏனைய பிரச்சினைகளுக்கும் தீர்வு காணமுடியும்''—என்றார்.

## உடுப்பிட்டி சிவா

தமிழ் காங்கிரஸ் பொதுச் செயலாளரும் தமிழர் கூட்டணித் தலைவர்களில் ஒருவருமான திரு. மு. சிவசிதம்பரம் பேசுகையில் கூறியதாவது:—

''இந்தக் கூட்டத்தில் திரு. டபிள்ஸ் டயஸ் பண்டாரநாயகாவும் கலந்து கொண்டிருந்திருப்பாரானால் நன்றாக இருந்திருக்கும். ஏனெனில் அவர்தான் குற்றம் காட்டப்பட்டுள்ளவர் — ஆனாலும் அவரே அண்மையில் நிறைவேற்றியுள்ள குற்ற இயல் நீதிமன்றச் சட்டப்படி குற்றம் காட்டப்பட்டவர் இன்றியே வழக்கை நடத்தலாம் அதன்படியே அவருக்கு எதிராக பொது மக்களாகிய உங்கள் முன் இந்த வழக்கை நடத்துகிறோம்.

''ஜனநாயகம் இன்னும் இறந்துவிடவில்லை என்று டபிள்யூ டயஸ் பண்டாரநாயகா கூறியிருக்கிறார். ஆனால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஜனநாயகம் எப்போ இறந்துவிட்டது தமிழாராய்ச்சி மாநாட்டை கொழும்பில்தான் வைக்க வேண்டும்; யாழ்ப்பாணத்தில் வைக்கக்கூடாது என்று, என்று கூறினார்களோ அன்றே சனநாயகம் செத்துவிட்டது.

## ஜனநாயகக் கொலை

''சனவரி 10ம் திகதி உலகத்தமிழ் மாநாட்டில் அமைதியாகக் கூடியிருந்த 50,000 தமிழ் பொதுமக்கள் மீது பொலிசார் அனுவசியமாக, கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசி குண்டாந்தடி கொண்டு தாக்கி மக்களை இம்சைப் படுத்திய அன்றே சனநாயகம்செத்துவிட்டது.

''இந்த ஜனநாயகக் கொலையைப் பற்றி — தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி பற்றி தென்னிலங்கைக் கட்சிகள் எதுவும் மூச்சுக்கூட விடவில்லை! அனுதாபம் கூட தெரிவிக்க முன்வரவில்லை

## சிறையில் இளைஞர்கள்

''உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடத்தப்படாது தள்ளிப்போடப்பட்டு வருகின்றன. இதன் காரணமாவே, யாழ்ப்பாணத்தில் தங்கள் சுதந்திரக் கட்சி துறையப்பாமேயராக இருப்பதாக அவர்களால் பெருமைப் பட்டுக்கொள்ள முடிகிறது. காங்கேசன் துறை இடைத்தேர்தல் கடந்த ஒன்றரை யாண்டுகளாக நடத்தப்படாமல் ஜனநாயகம் படுகொலை செய்யப்படுகிறது.

''நீர்கொழும்பு, வெலிக்கடை சிறைகளில் 42க்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்கள்—எதுவித காரணமுமின்றியும் விசாரணை ஏதுமின்றியும் இரண்டு ஆண்டுகளாக அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள்! இந்நிலையில் ஜனநாயகம் எங்கே வாழ்கிறது?

## அரசியல் சட்டத்தை ஏற்கோம்!

''தமிழ் மக்களைப் பொறுத்தவரை எந்தச் சிங்களக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் எமக்குப் பயனில்லை.

புதிய அரசியல் சட்டத்தை ஏற்க மறுப்பது விசுவாசமற்ற செயல் என்று டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா கூறியிருக்கிறார். இந்நாட்டுத் தமிழ் மக்களைப் பொறுத்தவரை, புதிய அரசியலமைப்பை நாங்கள் ஏற்க மாட்டோம் — அதன் கீழ் வேலை செய்ய மாட்டோம்— அதை நூற்றுக்கு நூறு முழுதாக நிராகரிக்கிறோம் என்று திட்டவட்டமாக அறுதியிட்டு, 1972ம் ஆண்டு மே 22-ம் திகதியே அவர்கள் கூறிவிட்டார்கள் என்பதை நான் அமைச்சருக்கு நினைவூட்டுகிறேன்.

''நண்பர் அமிர்தலிங்கம் கூறியதைப் போன்று இந்நாட்டில் ஒரே இலங்கையில் வாழ்வதாக இருந்தால், சம உரிமையும் சமவாய்ப்பும் சுயமரியாதையும் உள்ள மக்களாக வாழுவோம் — இன்றேல் தனியே பிரிந்து, நண்பர்களாக வாழ்வோம் என்று கூறிவிடை பெறுகிறேன்!''

இதன் பின் சபையோரின் கேள்விகளுக்கு பேச்சாளர்கள் பதில் இறுத்தனர். இறுதியில் திரு இலங்கை நாகநாதன் நன்றி கூறினார். ஒருவருக்கு ஒரு ரூபா கட்டணமாக வைத்தும் பெருந்திரளான மக்கள் மண்டபம் முழுவதும் திரண்டிருந்தது அரசியல் விழிப்புணர்வைக் காட்டுவதாக அமைந்திருந்தது.

இலங்கைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.

5வது வெற்றி வாரம்

# சென்ரல் (மருதானை) 2,6,9-30

(சனி, ஞாயிறு காலை 10 மணிக்கும்)

# ராணி (யாழ் நகர்)

10.30, 2.30, 6 30, 9.30

இரத்த பாசம் கொண்ட நான்கு சகோதரர்களைப் பற்றிய உள்ளத்தைத் தொடும் உணர்ச்சிபூர்வமான



கதை. எங்கும் எல்லோரிடத்தும் வாழ்க்கையில் நடக்கும் சம்பவங்களைப் பின்னணியாகக் கொண்ட குடும்பக் கதை.

இசை, கதை, நகைச்சுவை அனைத்தும் நிறைந்த அருமையான படம்.

ஜெய்சங்கர், ஏ. வி. எம். ராஜன், பிரமீளா,

தேவிகா, சுந்தரராஜன், சோ, மனோரமா, நிர்மலா நடிக்கும்

ஜெயந்தி பிலிம்ஸ்

# அன்புச் சகோதரர்கள்

(இலவச பாஸ்கள் ரத்து)

விரக்தியேற்படாமல் தவிர்ப்பதற்காக இடத்துக்கு முந்துங்கள் தியேட்டருக்கு வாருங்கள்.

---

4-வதுவாரம் **செல்லமகால்** (கொட்டாஞ்சேனை)

வின்சர் (யாழ் நகர்)

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர், ஜெயலலிதா

மனோகர், முத்தையா, நம்பியார், நாகேஷ்

மனோரமா, ராமசாமி, கீதாஞ்சலி, பாரதி

— நடித்த —

# அன்னமிட்ட கை

---

# கெயிட்டி

திரையில்

காண்பிக்கப்படுகிறது

சிவாஜி கணேசன்,

சரோஜாதேவி

நடித்த

# கல்யாணிக்கு கல்யாணம்

(புத்தம் புதிய கொப்பி)

---

3-வது ஜனத்திரள் வாரம்

கெப்பிட்டல்-பிளாசா

(கொழும்பு) (வெள்ளவத்தை)

வெலிங்டன் (யாழ் நகர்)

திரைகளில்

எம்.ஜி.ஆர், ஜெயலலிதா,

என். எம். நம்பியார்,

எஸ். ஏ. அசோகன்,

நாகேஷ், மனோரமா,

—நடித்த—



# ராமன்தேடிய சீதை

(ஈஸ்மன் கலர்)

---

10வது வாரம்

# கிங்ஸ்லி

லிடோ (யாழ்நகர்)

முத்துராமன்,

ஜெயலலிதா,

நடித்தது

# சூரிய காந்தி

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா மாவத்தை 194 ஏ. இலக்கத்தில் 1974ம் வருடம் மே மாதம் 19-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.